விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 05 வெள்ளிக்கிழமை (18.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 151

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## வன்னியில் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கு உலகெங்கும் இன்று அஞ்சலி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வன்னி இறுதிப் போரில் உயிர்நீத்த தமிழ் உறவுகளின் மூன்றாவது ஆண்டு நிறைவு நாள் இன்று உலகம் எங்கும் வாழும் தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

2009 ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முடிபுற்ற வன்னி இறுதிப் போரில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் பலியாகிப்போன சம்பவம் உலகம் முழுவதையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியிருந்தது.

இந்நிலையில் இன்று மூன்றாவது ஆண்டு நினைவு நாளை புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகள் முழுவதும் நினைவு கூருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனையொட்டி லண்டன், பாரிஸ் ஆகிய நகரங்களில் இனப்படுகொலைக்கு எதிரான பேரணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டு இன்றும் தொடர்கின்றன.

இதுதவிர மே 18 அமைப்பு இன்றைய நாளை கரிநாளாக அனுஷ்டிக்குமாறும் இன்று மாலை 6.10 மணிக்கு வீடுகளில் சுடரேற்றி உயிரிழந்த எம் உறவுகளை நினைவு கூருமாறும் கேட்டுள்ளது.


இதேவேளை உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் மாலை 5 மணியளவில் நடைபெறும்.

இதுதவிர வன்னிப் பெருநிலப்பரப்பிலும் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு பரவலாக இடம்பெறும்.(ந-8;11)

# பொன்சேகா நாளை விடுதலை!

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு), முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.



நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவை கூடியபோது சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பான யோசனைத் திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா விடுதலை குறித்து அனோமாவுடன் மகிந்த பேச்சு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்வது தொடர்பாக அவரது மனைவி அனோமா பொன்சேகாவுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளார்.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பாக டிரான் அலஸ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேசியிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ டிரான் அலஸின் இல்லத்துக்குச் சென்று அனோமா பொன்சேகாவைச் சந்தித்துள்ளமை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு முன்னதாக அனோமா பொன்சேகாவை அலரி மாளிகைக்கு அழைத்துப் பேச ஜனாதிபதியின் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த (19ஆம் பக்கம் பார்க்க)

## பீரிஸ்-கிலாரி இன்று சந்திப்பு

## ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் தெளிவான வரைபையே அமெ. எதிர்பார்க்கும்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தெளிவான செயற்றிட்டத்தை தவிர்ந்த வேறு எதனையும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஏற்றுக்கொள்ள வாய்ப்பில்லை என கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினரை இன்று சந்திக்கும்போது அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் பீரிஸ் தலைமையிலான குழுவினரிடம் இருந்து தெளிவானதொரு செயற்றிட்டத்தையே எதிர்பார்த்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், அதற்கு குறைவான எதனையும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் ஆர்வம் (02ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆயரின் உயிருக்கு ஆபத்து! அச்சம் வெளியிடுகிறது ஆ.ம.உ.ஆணைக்குழு

மன்னார் மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் அடிகளாரின் பாதுகாப்புக் குறித்து ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

தமிழ் மக்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் தொடர்பில் எவ்வித தயக்கமும் இன்றி ஆத்மபூர்வமாக செயற்பட்டு வரும் இராயப்பு ஜோசப் அடிகளார் தொடர்ச்சியாக தனது கவலைகளை வெளிப்படுத்தி வருகின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது 146,000 பேர் வரை காணாமற் போயுள்ளதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளித்தமை தொடர்பில் இராயப்பு ஜோசப் அடிகளாரிடம் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் ஜனாதிபதிக்கும், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இராயப்பு ஜோசப் (02ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கிற்கு சுயாட்சித் தீர்வு இதையே சர்வதேசம் விரும்புகிறது

### -எரிக் சொல்ஹெய்ம்

இலங்கை மீது கொண்டுவரப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தினை இந்தியா ஆதரித்து வாக்களித்தமை முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வென எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நோர்வே தொழிற் கட்சியின் அனைத்துலக விவகாரங்களுக்கான மையம் மற்றும் நோர்வே தமிழர் கற்கை மையம் ஆகியவற்றின் கூட்டிணைந்த ஏற்பாட்டில் ஒஸ்லோவில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைத் தீவில் தனிநாடு அமைவதற்கு அனைத்துலக சமூகம் ஆதரவு அளிக்கப்போவதில்லை. தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடங்களான வடக்கு கிழக்கிற்கு சுயாட்சித் தீர்வு ஏற்படுத்தப்பட் வேண்டுமென்பதில் அனைத்துலக மட்டத்தில் பெரும் ஆதரவு நிலவுகின்றது. அதே (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரை கொன்றுகுவித்த ஜனாதிபதியை சர்வதேச நாடுகள் தண்டிக்க வேண்டும்

### பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ்

தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை பெற்றுத்தர உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இலக்கை நோக்கி போராட தமிழ்நாட்டு தலைவர்கள் அனைவரும் இனப்படுகொலை நாளான இன்று உறுதி எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழ்நாட்டு தமிழர்களின் தொப்புள்கொடி உறவுகளான ஈழத் தமிழர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் கடலோரப் பகுதியில் மிகக் கொடுமையான முறையில் கொன்று குவிக்கப்பட்ட மே 18 உலக வரலாற்றில் துக்க நாள் ஆகும்.

இந் நாளில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள் அனைவருக்கும் வீர வணக்கம் செலுத்துவோம்.

அணு ஆயுத வல்லரசுகளின் உதவியுடன் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழர்களை ராஜபக்ஷ கொன்று குவித்து இன்றுடன் மூன்று ஆண்டுகள் நிறைவடையும் போதிலும், இனப்படுகொலைக்கு காரணமானவர்களுக்கு இன்று வரை தண்டனை கிடைக்கவில்லை.

இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியில் 60 லட்சம் ஐரோப்பிய யூதர்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சங்கிலியை அபகரிக்க முற்பட்ட பெண்கள் இருவர் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

ஆலயவழிபாட்டில்ஈடுபட்டுக்கொண்டிருந்த வயோதிபப் பெண்ணின் தங்கச் சங்கிலியை அபகரிக்க முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு இளம் பெண்களை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரி வாரிநகர் சிவன்கோவிலில் இடம்பெற்றுள்ளது.

வியாழ மாற்றத்தையொட்டி இந்த ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற பூஜை வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வயோதிபப் பெண்ணின் தங்கச் சங்கிலியையே சன நெரிசலைப் பயன்படுத்தி குறித்த பெண்கள் அபகரிக்க-முற்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் இன்று காலை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (ந-6,11)



போரில் ஈடுபட்ட முப்படை வீரர்களுக்கு யாழ்ப்பாண மாணவர்கள் மலர்கொடுத்து சின்னம் சூட்டினார்கள். போரில் உயிரிழந்த முப்படைவீரர்களுக்குஅஞ்சலிசெலுத்தும்நிகழ்வு வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் நேற்று பலாலி படைத் தலைமையகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின்போதே மாணவர்கள் முப்படை வீரர்களுக்கும் தாமரை மலர் கொடுத்து சின்னம் சூட்டிக் கௌரவித்தனர். (ந-6)

## மன்னார் ஆய...

அடிகளார் கடிதங்களை அனுப்பியிருந்தார்.

எந்தவொரு குற்றச் செயல்களிலும் ஈடுபடாத ஒருவர் மீது விசாரணைகளை மேற்கொள்வது என்பது மக்களின் அடிப்படை குடியுரிமையை மீறுகின்ற செயலாகக் காணப்படுவதுடன், மக்கள் மத்தியில் அச்சம் மற்றும் குழப்பம் என்பவற்றை தோற்றுவிக்கக் காரணமாக அமைந்துள்ளது. இதனையடுத்து அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

இலங்கையில் காணாமல் போதல்கள் மற்றும் ஆட் கடத்தல் சம்பவங்கள் இடம்பெறுவது வழமையாகிவிட்டது. அங்கு மதகுருமார்கள் மற்றும் பௌத்த பிக்குகள் கூட காணாமல் போயுள்ளதுடன், கடத்தப்பட்டுமுள்ளனர்.

இலங்கையில் மனித உரிமைகள் குறித்து குரல் கொடுப்பவர்கள் மோசமான ஆபத்தைச் சந்திக்க வேண்டிய உள்ளனர்.

இத்தகைய சூழ்நிலைகளின் மத்தியில், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலன்களுக்காக குரல் கொடுத்து வரும் இராயப்பு ஜோசப் அடிகளாரின் பாதுகாப்புத் தொடர்பில் பலர் கவலை கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இவருக்கான பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் இவ்விவகாரம் தொடர்பில் சர்வதேச சமூகமும் அரசாங்கத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும்என ஆசியமனிதஉரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. (ந-8,11)

## ஜெனிவாத் தீர்மானத்தை...

கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தை நடைமுறைப் படுத்த பீரிஸ் தலைமையிலான குழுவினருக்கு அழுத்தம் கொடுக்குமாறு அமெரிக்க வெளிவிவகார குழுவில் அங்கம் வகிக்கும் செனட்டர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் ஹிலாரி கிளின்டனிடமும் அமெரிக்க தமிழ் அரசியல் செயற்றிட்டக் குழு கடந்த வாரம் வலியுறுத்தியுள்ளது.

இத்னிடையில் இலங்கையில் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸுடன் கடும் தொனியில் பேச வேண்டும் என கிலாரி கிளின்டனுக்கு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர் இன்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கிலாரி கிளின்டனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

# கருத்து மோதல் மாணவி தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

பாடசாலையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக மாணவி ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு ஊரணி குடியேற்றம் வல்வெட்டித்துறையில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த கஜேந்திரன் வைஸ்ணவி (வயது 16) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

குறித்த மாணவி கல்வி கற்கும் பாடசாலையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே இத்தற்கொலைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது. சடலம்பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-4,24)

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (சா/த) மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்தல் தொடர்பாக இன்று பிற்பகல் 2 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரியில் வலிகாமம் வலயப் பாடசாலை அதிபர்களுடன் நடைபெறவிருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறாது என வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

## சிவசக்தி ஆனந்தன் எம்.பியின் வாகனம் மோதி ஒருவர் பலி

வன்னியிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் வாகனம் மோதியதில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னாள் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் வவுனியா நகரசபை வேட்பாளருமான பி.பரஞ்சோதி (உதயன்) உயிரிழந்தார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

சிவசக்தி ஆனந்தனின் அலுவலகத்திற்கு சென்ற பரஞ்சோதி அங்கு நின்றவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த வேளை, பின் பக்கமாக செலுத்தப்பட்ட வாகம் இவரை மோதியுள்ளது. உடனடியாக வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு உயிரிழந்தார். (ந-266)

## நல்லூர்க் கோட்ட அதிபர்களுக்கு

நல்லூர் கோட்ட அதிபருக்கான கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் அமைந்துள்ள நல்லூர் கோட்டக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இதில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா அறிவித்துள்ளார். (ந)

## சிப்பாய் சண்டித்தனம் இளைஞர்கள் கவனிப்பு

மதுபோதையில் இளைஞர்களோடு சண்டித்தனத்தில் ஈடுபட்ட இராணுவச்சிப்பாய் ஒருவருக்கு அவ் இளைஞர்கள் ஒன்று கூடி அடி கொடுத்து அனுப்பியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் யாழ்முட்டாஸ்கடைச்சந்தியில்இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த புஸ்பகுமார (வயது 35) என்ற இராணுவச் சிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.நகரில் உள்ள உணவகம் ஒன்றில் இருந்த இளைஞர் குழுவொன்றை இராணுவச் சிப்பாய் மிரட்ட முற்பட்டபோதே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவருகிறது. (ந-4)


ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா ஆலோசனையின் இறுதி நாள் ஞாயிறு இரவு 7 மணிவரை நீடிக்கப்பட்டது.

★ ஜூன் 30-ம் திகதியுடன் ஆஸ்திரேலியா குடிவரவுக் கொள்கையில் பாரிய மாற்றங்கள், இறுக்கங்கள்.
★ இதனிடைப்பட்ட காலத்தை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்படல் வேண்டும்.
★ இதனால் புணியாளர்கள், வணிகர்கள் பயன்பெறும் வகையில் எமது ஆலோசனை இறுதித் தினத்தை இம்மாதம் 20.05.2012 ஞாயிறு இரவு 7 மணிவரை நீடித்துள்ளோம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்



தலைமைக் காரியாலயம்
37, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9016
075 657 4136

கிளைகள்:
115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 021 228 5544
22A, பிராங்பெட் பிளேஸ், பம்பலப்பிட்டி. 0112508443
504, Hampton Street, Melborn, Australia.
0061390437100
0061412479209
(C-022)



சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளிற்கு சட்டரீதியான விசா ஆலோசனைகளிற்கு

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்



முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 021 221 9016

கிளைகள்:
இல. 115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.
T.P : 021 228 5544
இல. 22A, பிராங்பெட் பிளேஸ், பம்பலப்பிட்டி.
T.P : 0112508443
504, Hampton Street, Melborn, Australia.
Land : 0061390437100 Mobile : 0061412479209
(C-022)


# கல்வி அபிவிருத்தி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் புலோலி மெதடிஸ்த மிஷசன் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் வடமராட்சிக்கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் அனைவரையும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ந-9)


வியாழ மாற்றம் பலாபலன்கள்

17.05.2012இல் வியாழன் மாற்றம். பலாபலன்கள் நூல் வெளிவந்து விற்பனையாகிறது. ரூபா 50/- யாழ் நகர் எங்கும் கிடைக்கும்.
ஆக்கம்:- சோதிடஞானி சன்மாஸ்ரர் (ஆ. சண்முகலிங்கம்)
சி.சி.ரி.எம் பாடசாலை லேன்,
கொக்குவில் மேற்கு. (இ)



SHAKTHI HOME SCIENCE ACADEMY யின்
மகளிருக்கான குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன



கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள், Fondant ஐசிங், உணவு தயாரித்தல், Varieties of Cakes, Glass Painting, Crystal Work, Knitting ஆகிய பயிற்சிகளை பயில விரும்பும் மாணவிகள் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
இடம் : அச்சுவேலி
தொடர்புகளுக்கு:- 021-3008487
(8469)



செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



சிவா, விமல், அஞ்சலி, ஓவியா, சந்தானம் மற்றும் பலர் நடிப்பில் சுந்தர் C இன்
கலகலப்பு
மசாலா கபே
இலங்கை இந்திய ஒரே வெளியீடு
10.30, 2.30, 6.30
D.T.S



YAALH ENGLISH ACADEMY
ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்
புதிய வகுப்புகள் ஆரம்பம்
FOUNDATION LEVEL
23.05.2012 : புதன் : பிற்பகல் 3.30 மணிக்கு
INTERMEDIATE LEVEL
26.05.2012 : சனி : பிற்பகல் 3.00 மணிக்கு
♦ முழுக்கட்டணம் : 1500 ரூபாய் (மூன்று மாதப்பயிற்சி)
♦ இலவசம் : முதலிரு வகுப்புகள்
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்

# இன்று ஒரு தகவல்

## ஆணவக் குரங்கு

ஒரு காடு. அங்கே புத்தர் ஒருவர் தனியாக நடந்து போய்க் கொண்டிருந்தார்.

அவருக்குப் பின்னால் ஒரு குரங்கு... அவரை பின் தொடர்ந்தபடியே சென்று கொண்டிருந்தது.

புத்தர் ஒரு தடவை பின்னால் திரும்பிப் பார்த்தார்.

குரங்கு இதைப்பார்த்ததும் அப்படியே குதித்து உயரே எழும்பி ஒரு கிளையிலே போய் அமர்ந்து கொண்டது.

உடனே புத்தர், "ஏன் இப்படி செய்கிறாய்?" என்று கேட்டார்.

"என்னை சாதாரணமாக நினைக்க வேண்டாம்... நான் மகா மந்தி இனத்தைச் சார்ந்தவன்... எல்லாம் என்னால் முடியும்... "முடியாது" என்ற வார்த்தையே என்னுடைய அகராதியில் கிடையாது. என்ன வேண்டுமென்றால் செய்வேன். எனது சொந்த முடிபு... என்னுடைய பலம்... என்றது.

இப்படியாக கூறிவிட்டு, "அப்படியென்றால் ஒரு பந்தயம் வைத்துக் கொள்ளலாமா?" என்றார்.

"ஓம்... வைத்துக் கொள்ளலாம்" என்றது.

''வேறு ஒன்றுமில்லை... இப்போது நீ மேலே எழும்பி அந்தக் கிளையிலே அமர்ந்த மாதிரி... அங்கேயிருந்து தாவி என் உள்ளங் கையிலே வந்து அமர்ந்து கொள்ள வேண்டும். அவ்வளவுதான்'' என்றார்.

"அப்படி அமர்ந்தால் என்ன பரிசு?" என்றது.

''சுவர்க்கத்திலே இருக்கிற மாமன்னன் மரகதச் சக்கரவர்த்தியை என்னோட வந்து இருக்கும்படியாக அழைக்கிறேன். அந்தச் சமயத்தில் அவரது அரியணை அங்கே காலியாகி விடும். நீ உடனே அதிலே போய் பதவியேற்கும் படியாக அமர்ந்து கொள்ளலாம்"

பந்தயத்திலே தோல்வி அடைந்து விட்டால், ஒரு கல்பகாலம் இந்த பூமியிலே வாழ வேண்டியிருக்கும். அதன் பின்னர்தான் என்னிடம் வரமுடியும்... என்ன சொல்கிறாய்?" என்றார்.

குரங்குக்குக் தாவுவது ஒரு பெரிய காரியமா? ''இது எனக்கு சாதாரண விடயம்... என்ன இப்போதே தாவட்டுமா?" என்றது.

"சரி" என்று சொல்லி உள்ளங்கையை நீட்டினார். அவருடைய கை தாமரை இலை அளவிற்கு விரிந்தது... குரங்கு சௌவுகரியமாக வந்து அமர்ந்து கொள்வதற்காக...

குரங்கோ தாவுவதற்குத் தயாரானது. அதற்கு முன்னர் ஒரு சிறிய யோசனை... ஏற்பட்டது.

"இந்தக் கிளையில் இருந்து அந்தக் கைக்குத் தாவுவது எனக்கு மிகவும் அற்பமான ஒரு காரியம். எனது கௌரவத்திற்கு இது சரியாக அமையாது. அதனால் இங்கே இந்தக் கிளையிலேயிருந்து உயர எழும்பி மேல் உலகம் சென்று அங்கே ஒரு சுற்று சுற்றிவிட்டு அங்கேயிருந்து வந்து விடலாமே" என்று நினைத்தது.

"என்ன யோசிக்கிறாய்?" என்றார் புத்தர்.

''ஒன்றுமில்லை. இதோ பாய்கிறேன் என்று சொல்லி தாவி உயரே போய்விட்டது. சிறிது நேரத்திலே வான உலகத்திற்கே சென்று விட்டது. அங்கே ஐந்து பளிங்குத் தூண்கள்... இளஞ்சிவப்பு நிறத்திலே நின்று கொண்டிருந்தது.

குரங்கு நினைத்தது ''புத்தரிடம் போய் இந்தப் பளிங்குத் தூண் களைப் பார்த்தேன் என்று கூறினால் திகைத்துப் போய் விடுவார். இதில் அடையாளமிட வேண்டும்'' என்று அந்தரத்திலே மிதந்து கொண்டே நினைத்தது.

உடனே ஒரு தூணில் எழுதியது; ''ஒரு மகா ஞானி இங்கே வந்து விட்டுப்போனார்'' என்று எழுதிவிட்டு... அப்படியே கீழே தாவி வந்து புத்தரின் உள்ளங்கையிலே அமர்ந்தது.

"எப்படி பார்த்தீர்களா... வான உலகத்திற்கே போய் அங்கே இருக்கிற ஐந்து பளிங்குத் தூண்களைப் பார்த்துவிட்டு அதிலே நான் வந்த விபரத்தையும் எழுதி வைத்துவிட்டு வந்துள்ளேன்" என்றது.

"அப்படியா?" என்று புத்தர் தலையசைத்தார்.

''ஆமாம்... சந்தேகமென்றால், வாருங்கள் போய் பார்க்கலாம்..." என்றது குரங்கு.

"அதுக்குத் தேவையில்லை... அப்படியே சற்று கீழே குனிந்து பார்" என்றார். பார்த்தது.

அங்கே புத்தரின் உள்ளங்கை தெரிந்தது. நன்றாக உற்று நோக்கியது. அவரது ஒரு விரலிலே அது எழுதிய வாசகம் தெரிந்தது.

குரங்கு சற்று யோசனை செய்தது.

"அப்படியென்றால்... வானத்திலே நான் பார்த்த தூண்கள் புத்தரின் விரல்களா?"

இதைப்புரிந்து கொண்ட உடனேயே அந்தக் குரங்கின் ''கர்வம்'' அழிந்துவிட்டது.

நமதுமனம்தான் இந்தக் குரங்கு. "மனம்" என்பதும் "ஆணவம்" என்பதும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். மனம் இருக்கும் வரை ஆணவம் இருக்கும். மனம் அழிந்தால்தான் ஆணவமும் அழியும்.

''மனம் அழிய வேண்டும்'' என்று பெரியோர் சொல்வது இந்த அர்த்தத்திலேதான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சமுர்த்தித்திட்டத்தை வலுப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம்-யாப்பா தெரிவிப்பு

நாடு பூராகவும் உள்ள சமுர்த்தி வங்கிகளில் 49 பில்லியன் ரூபா பணம் வைப்பிலுள்ளது. இதனை அரசாங்கம் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்துவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது. சமுர்த்தித் திட்டத்தை நிறுத்தவோ சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கும் கொடுப்பனவுகளை நிறுத்தவோ போவதில்லை என பதில் தகவல் ஊடகத்துறை அமைச்சரும் பிரதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

சமுர்த்தித்திட்டம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள தவறான குற்றச்சாட்டுக்கள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் அடங்கலாக பலர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர். அமைச்சர் மேலும் கூறியதாவது,

சமுர்த்தித்திட்டத்தை அழிப்பதற்கு அன்றி அதனை மேலும் வலுப்படுத்தவே அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. சமுர்த்திக்கென தனியாக திணைக்களம் அமைப்பதற்கான சட்ட மூலத்தை சட்டமா அதிபர் திணைக்களம் அமைச்சிற்கு வழங்கியுள்ளது. ஜூலை மாதத்தில் இதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதி பெற உள்ளோம்.

குறைந்தளவு அங்கத்தவர்கள் உள்ள சமுர்த்தி தொழிற்சங்கமொன்று சமுர்த்தித்திட்டம் குறித்து தவறான கருத்துக்களை வெளியிட்டுள்ளது. சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கோ பயனாளிகளுக்கோ எது வித அநீதியும் ஏற்பட இடமளிக்கமாட்டோம்.

வடக்கில் சமுர்த்தித் திட்டத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யுத்த காலத்தில் இங்கு சமுர்த்தித்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை. ஆனால், புதிதாக 42 ஆயிரத்து 667 குடும்பங்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்கு புதிதாக 18 சமுர்த்தி வங்கிகள் ஆரம்பிக்கவுள்ளோம்.

சமுர்த்தி முத்திரை வழங்குவதை நிறுத்தி அவர்களுக்கான பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு வருகிறோம்.

இதுவரை 49 பில்லியன் வங்கிகளில் வைப்பு செய்யப்பட்டுள்ளது. வருடாந்தம் சமுர்த்தி வங்கிகளில் 12 ஆயிரம் மில்லியன் வைப்பு செய்யப்படுகிறது. குறைந்தளவு பணமே மீளப்பெறப்படுகிறது.

சமுர்த்தி வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட நிதி அரச வங்கிகளில் வைக்கப்பட்டுள் ளன. சமுர்த்தி பெறுவோரை குழுக்களாகப் பிரித்து அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# வியாழ மாற்ற ஹோமம்

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வியாழ மாற்ற ஹோமம் இன்று காலை இடம்பெறவுள்ளது.

இக்ஹோமம் இடம்பெறவுள்ள இன்றையதினம் வியாழ பரிகார பூசைகள் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 140 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 75 | 80-110 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 50 | 60 |
| தக்காளி | 130 | 160 | 70 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 40 | 60 | 20 | 50 |
| கரட் | 50 | 40 | 30 | 80-100 |
| பூசணி | 25 | 20 | 20 | 30 |
| புடோல் | 40 | 40 | 30 | 60 |
| வாழைக்காய் | 25 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-75 | 60-100 | 70 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 60 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 30 | 70 | -- | 70 |
| பயற்றங்காய் | 60 | 80 | 60 | 40 |
| லீக்ஸ் | 120 | 160 | -- | 160 |
| பீற்றூட் | -- | 60 | 50 | 80 |
| கறிமிளகாய் | 60 | 100 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 280 | 200 |
| போஞ்சி | -- | 140 | -- | 140 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 15 | 15-16 |

# இராசி பலன்

*18.05.2012*
*(வைகாசி 05, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு*
*திரயோதசி பின்னிரவு 1.47 மணிவரை*
*அச்சுவினி முழுவதும்*
*இராகுகாலம் 10.22-11.52 மணிவரை*
*சுபநேரம் 5.52-7.22 மணிவரை*
*பிரதோச விரதம்*

**மேடம்** சிவாலய வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள், குடும்பத்தினர் உங்களின் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**இடபம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், குல தெய்வ வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், பிரியமான சிலருக்காக சில செலவுகள் செய்யும் சூழ்நிலை அமையலாம், சயன சுகக்குறைவான நாள்.

**மிதுனம்** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், பொருளாதார நிலை மேலோங்கும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** ஆரோக்கியமான நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும், கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**கன்னி** சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பிறருக்கு உதவி செய்யும் சிந்தனை உருவாகும், எடுத்த காரியங்கள் தாமதமாகும், போசன சுகமுண்டு.

**துலாம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், உறவுகள் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** செய்தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், விருந்துபசாரங்களில் கலந்து சிறப்பிக்கும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனையுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும்.


**தனுசு** பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், ஆலய வழிபாடு ஆனந்தமளிக்கும், சொத்துக்களால் நன்மையுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மகரம்** பெற்றோர் மீது பிரியம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** உடன்பிறப்புகள் மூலம் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம், ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**மீனம்** வாக்கு மேன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னெற்றமுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.


வளவன்



# உயிர் மீண்ட காளை மாடு

8

ஆலய மகா கும்பாபிஷேகத்தில் தச தரிசனம் முடிந்து திருக்கதவு திறக்கப்படும் போது 'பசு' வை முன்னிறுத்துதல் என்பது பற்றியும் புதுமனைப் புகுதலின் போது பசுவை வீட்டின் சுவாமி அறையில் கட்டுவது பற்றியும் முன்னைய பகுதிகளில் பார்த்த நாம்,



சைவத்தமிழ் திருமணத்தின் போது அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல் என்ற சடங்குகளுக்குள் திருமணத் தம்பதிகள் பசுவைப் பார்த்தல் என்ற நிகழ்வும் நடை பெறுவதையும் நோக்குதல் பொருத்துடையதாகும்.

இல்லறத்தில் இணையும் தம்பதிகளைப் பார்வதியும் பரமேஸ்வரனுமாகப் பாவனை செய்தே மாங்கல்யதாரணம் நடைபெறுகின்றது.

இவ்வாறு இல்வாழ்வில் இணையும் தம்பதிகளைப் பார்வதி பரமேஸ்வரனாகப் பாவித்தே பெரியோர்கள் அறுகரிசியால் வாழ்த்துவர்.

இத்துணை சிறப்புமிக்க திருமண பந்தத்தில் இணையும் போது 'பசு'வை முன்னிறுத்துதல் என்பதிலும் பொருளுண்டு.

அதாவது ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று இறை பரம்பொருள் ஆவாகனம் செய்யப்பட்டவுடன் பசுவை முன்னிறுத்துதல் போன்று, பார்வதி பரமேஸ்வரனாகப் பாவனை செய்யப்படும் புது மணத் தம்பதிகளும், முதலில் பசுவை தரி சிக்க வேண்டும்.

இதனடிப்படையில் புதுமணத் தம்பதிகள் 'பசு'வைத் தரிசிக்கின்ற ஏற்பாடு உண்டு.

இதுதவிர, இல்லறத்தில் இணையும் உங்களின் குடும்பத்தின் தாயாக- செல்வமாக- இல்லறக் கடமைகளைச் செய்வதற்கு வேண்டிய பஞ்சகௌவியத்தை தருகின்ற தேவலோக மாதாவாக இருக்கின்ற பசுவை முதலில் தரிசித்தல் என்ற அடிப்படையிலும் திருமணச் சடங்குகளின் போது பசுவைத் தரிசிக்கும் நிகழ்வு நடை பெறுவதுண்டு.

எனினும் இன்றைய 'வீடியோ' அதிகாரத்தில் (இது ஐ.நா. சபையிலுள்ள 'வீற்றோ' அதிகாரம் போல) வீடியோ படப்பிடிப்பாளர் சொல்வதன்படியே எல்லாம் நடப்பதால், அருந்ததி காட்டுதல், பசுவைத் தரிசித்தல் என்ற நிகழ்வுகள் பெரும்பாலான திருமணச் சடங்குகளில் இடம்பெறுவதில்லை.

அதிலும் மண்டபத்துக் கல்யாணம் என்றால் அங்கு பசுவுக்கு அறவே இடமில்லை. இதன் காரணமாகப் பசுவை தரிசிக்கும் எங்கள் பண்பாடு வழக்கொழிந்து போவது வேதனையே.

**சிங்கக் கொடியும்**
**நந்திக் கொடியும்**

இலங்கையில் தேசியக்கொடி வாள் ஏந்திய சிங்கத்தைக் கொண்டுள்ளது. சிங்கள இனத்தின் தோற்றுவாய் சிங்கம் என்பதாக மகாவம்சம் கூறுகின்றது.

மகாவம்சத்தை தந்த மகாநாம தேரர் சிங்கத்திற்கு மானிடக் குழந்தைகள் பிறந்ததாகக் கூறுகின்ற கதைகள் விஞ்ஞான ரீதியில் ஏற்புடையதா? என்பது பற்றியெல்லாம் இவ்விடத்தில் நாம் ஆராய்வதை தவிர்த்துக் கொள்ளலாம்.

எதுவாயினும் இலங்கையின் தேசியக் கொடியில் இருக்கக்கூடிய வாள் ஏந்திய சிங்கம் சிங்கள இனத்தைச் சுட்டுவதாகும்.

# நந்திக் கொடியும் சிங்கக் கொடியும்

இலங்கையில் தேசியக்கொடி சிங்கக் கொடியாக இருக்கின்ற அதேநேரம் தமிழ் இனத்தின் கொடியாக நந்திக்கொடி இருப்பது இங்கு நோக்குதற்குரியது.

சிவசின்னமான நந்தியே தமிழ்க் கொடியாக இருப்பதனை உணர முடியும். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக எம் மண்ணில் நந்தி வழிபாடு நிலவி வருவதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் உறுதி செய்துள்ளார்.

அந்தவகையில் தமிழ் இனத்தின் இலச்சினையாக இருக்கக்கூடிய நந்திக்கொடியே தமிழ்க்கொடியாகியது.

1995 இல் இலங்கை இராணுவம் மேற்கொண்ட தாக்குதலின் போது யாழ்ப்பாண மண் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமத்து மக்கள் தென்மராட்சி, வடமராட்சி, வன்னி ஆகிய பிரதேசங்களுக்கு நகர்வடைந்த நிலையில் மக்கள் இல்லாத யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியிருந்தது.

1995 இல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கைப் படையினர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியது என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக இருந்தது.



யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட நிகழ்வு அப்போது யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் கொண்டாடப்பட்டது. நிகழ்வின் ஆரம்பத்தில் இரண்டு கொடிகள் ஏற்றப்பட்டன. அதில் ஒன்று இந்த நாட்டின் தேசியக் கொடியான சிங்கக்கொடி. மற்றையது தமிழ் இனத்தின் நந்திக்கொடி.

தேசியக்கொடியை, அன்றைய பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும், நந்திக் கொடியை ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் எஸ்.இராமலிங்கமும் ஏற்றி வைத்தனர்.

சிங்கக்கொடிக்கு சமமாக நந்திக்கொடி ஏற்றப்பட்ட சமத்துவ சமரசம் சந்திரிகா அம்மையாரிடம் இருந்ததென்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்துடையதே.

1995 இல் சிங்கக்கொடியும் நந்திக் கொடியும் ஏற்றப்பட்ட போது சிங்கக் கொடிக்கு சமமாக நந்திக்கொடி ஏற்றப்பட்டதனை சிங்கள ஊடகங்கள் கண்டிக்கவோ நந்திக்கொடி ஏற்றப்பட்டமை நல்ல சமிக்ஞை என்று தமிழ் ஊடகங்களோ செய்தி வெளியிட்டதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

ஆனால், 1995 இல் இவை நடந்து 17 ஆண்டுகளுக்குப் பின்னர் 2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து நடத்திய மேதினக் கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சிங்கக்கொடியை தூக்கிப் பிடித்து என் விருப்பத்திற்குரிய கொடி என்று கூறியபோது நந்திக்கொடியின் நாமம் இல்லாது போனது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் புத்திசாலித்தனமாக நடந்திருப்பார்களாயின் மேதினக் கூட்டத்தில் நந்திக் கொடியையும் தூக்கி நிறுத்தி இந்த நாடு சிங்கள - தமிழ் இனங்கள் வாழும் நாடு என்று நிதர்சனப் படுத்தியிருக்க முடியும். ஆனால், அது நடக்கவில்லை. (திங்கள் வளரும்)

# 5000 ரூபாவை பெறாதவர்கள் பதிவினை மேற்கொள்ளவும்

## முல்லை. அரச அதிபர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களில் மீள்குடியேற்ற பணக்கொடுப்பனவான 5ஆயிரம் ரூபாவை இதுவரை பெறாதவர்கள் தத்தமது பிரதேச செயலகத்திற்குச் சென்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இதில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, மாந்தை கிழக்கு, வெலிஓயா, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் மீள்குடியேறி முல்லை. மாவட்ட செயலகத்தால் வழங்கப்படும் மீள்குடியேற்ற பணக் கொடுப்பனவை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களே எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-267)


கணபதி துணை

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

மஹோற்சவம் -2012



18.05.2012 வெள்ளிக்கிழமை

நான்காம் நாள் திருவிழா

இரவு 07.00மணி

தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்

www.inuvilinfo.com இணுவில் (சி-001)


# விமல்வீரவன்ச பதவி விலக வேண்டுமாம்

வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச பதவி விலக வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

தனது வார்த்தைக்கு மதிப்பளித்து விமல் வீரவன்ச பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஒபாமா நிர்வாகம் இலங்கைப் பிரதிநிதிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்பட்டால் பதவியை துறக்க நேரிடும் என விமல் வீரவன்ச பகிரங்க எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அமெரிக்காவின் தீர்மானம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின் இலங்கைப் பிரதிநிதிகள் குழு அமெரிக்காவிற்கு விஜயம் செய்ய வேண்டுமென ஒபாமா நிர்வாகம் அறிவித்திருந்தது என திஸ்ஸஅத்தநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த அழுத்தம் காராணமாகவே இலங்கை வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் கிராமப்புற பெரும்பான்மை மக்களுக்கு ஒருகருத்தையும் சர்வதேச சமூகத்திற்கு மற்றுமொரு கருத்தையும் அரசாங்கம் வெளியிட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச பதவி விலகத் தவறினால் அவரது தேசப்பற்றாளர் என்ற நன்மதிப்பிற்கு பாரியளவில் களங்கம் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# கொழும்பு சுற்றுப்புற நகரங்களில் வீதிப்போக்குவரத்து மறுசீரமைப்பு

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட அதன் சுற்றுப்புற நகரங்களில் மறுசீரமைப்பினை ஏற்படுத்த ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனம முன்வந்துள்ளது.

பிரதான நகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்,பயணிகள் அசௌகரியங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வினை உள்ளடக்கியதாக இந்த மறுசீரமைப்பு முறைமை அமையும்.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன்தினம் போக்குவரத்து அமைச்சில் வைத்து கைச்சாத்திடப்பட்டது.

ஒப்பந்தம் தொடர்பாக அமைச்சர் ஊடகங் களுக்கு விளக்கமளிக்கையில்,

இந்த ஒப்பந்தம் 21 மாத கால எல்லையைக் கொண்டது. இக்காலப் பகுதிக்குள் கொழும்பு உளளிட்ட சுற்றயல் நகரங்களின் போக்குவரத்து முறைமை தொடர்பாக விசேட கற்கையொன்று முன்னெடுக்கப்பட்டு மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இன்று முதல் ஆறு மாத காலப்பகுதிக்குள் தற்போதைய போக்குவரத்து முறைமை முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் ,எதிர்கால திட்டங்கள் என்பன தொடர்பில் ஆராயப்படும்.

விபத்துக்கள், பயணிகள் அசௌகரியம், பொதுப்போக்குவரத்து முறைமையிலுள்ள குறைபாடுகள்,பாதசாரிகளது பிரச்சினைகள், பாடசாலை வான்கள் உள்ளிட்ட ஏனைய பொதுப் போக்குவரத்துக்கள், சூழல் மாசடைதல், வாகன தரிப்பிட வசதியில்லாமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்வாங்கியதாக அமையும் என தெரிய வருகின்றது. (அ-2)

# கை தவறி கீழே விழுந்த குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றினை இறைத்துவிட்டு மேலே ஏறியபோது கை தவறி கீழே விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.இச்சம்பவம் நேற்று முன்தினம் மதியம் இமையாணன் பருத்தித்துறையில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த வீரசிங்கம் துரைசிங்கம் (வயது39) என்பவரே படுகாயமடைந்தவராவார்.கழிவுநீரை அள்ளிவிட்டு மேலேறும் போது கிணற்றின் முதலாவது படிக்கட்டிலிருந்து தவறி விழுந்துள்ளார்.படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-2-4)

# பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவில் மேசன் பயிற்சிநெறி

(பூநகரி)

சுவிஸ் (எஸ்.டி.சி) அபிவிருத்தி நிறுவன ஒழுங்குபடுத்தலில் பூநகரிப் பிரதேச செயலக அனுசரணையுடன் பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவில் மேசன் வேலைப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக பூநகரி பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ள இப்பயிற்சிநெறி சுமார் ஆறு மாதங்களைக் கொண்ட நெறியாக இருப்பதோடு பயிற்சி நெறியினைத் தொடர்வோருக்கு நாளாந்த ஊக்குவிப்பாக தினசரி 400 ரூபா வழங்கப்படவுள்ளதுடன் பயிற்சி நிறைவில் சான்றிதழும் மேசன் வேலைக்கான உபகரணங்களும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் பூநகரி பிரதேச செயலக திட்டமிடல் பகுதிக்கு அல்லது தங்கள் பகுதி கிராம சேவகருக்கு அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-84)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

நுளம்பு பெருகும் விதமாகக் குப்பைகளினை கொட்டி வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மா. கணேசராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக்கண்டு ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபாவும் மற்றையவருக்கு ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

(யாழ்ப்பாணம்)

மது அருந்தி விட்டு போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்த நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 4ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

(யாழ்ப்பாணம்)

வீதிப்போக்குவரத்தினை மீறிய நால்வருக்கு யாழ். நீதவான் நீதிமன்றம் 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

குறித்த நால்வரும் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக்கண்டு வாகன அனுமதிப்பத்திரமின்றியும் வாகனத்தினை பதிவு செய்யாமலும் செலுத்தியதற்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் விபத்தொன்றினை ஏற்படுத்தியமைக்காகவும் 3 ஆயிரம் ரூபா அபராதமும் ஏனைய வாகனங்களுக்கு இடையூறாகவும் கவனயீனமாகவும் வாகனத்தை செலுத்தியமைக்கு 500 ரூபாவும் வருமான வரிப்பத்திரம் இன்றி ஆட்டோ செலுத்தியமைக்கு ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ-3-4)

## NALLUR PRADESHIYA SABHA

### INVITATION FOR EXPRESSIONS OF INTEREST FOR CONSTRUCTION SUPERVISION CONSULTANCY SERVICES FOR THE PROPOSED SHOPPING COMLPEX AND LIBRARY BUILDING AT KOKUVIL

1.Chairman, Nallur Pradeshiya Sabha,Nallur invites Expressions of Interest (EOI) from Consulting Firms / individual Consultants having prior experience of similar nature.

EOIs should be sent to the address indicated below on or before 30th May 2012 at 14.00 Hrs


2.The firm(s)/Individual Consultant must include in the EOI proposal, (i) summary details of the similar projects carried out by the out by the firm; (ii) one page summary of each project executed in the past three years showing nature and magnitude of projects, extent of responsibility and name of employer, etc; (iii) any other relevant information.

3. Chairman, Nallur Pradeshiya Sabha, Nallur reserves the right to shortlist or not to shortlist any or all of the applicant(s) or to cancel the entire process without assigning any reason. No liability will be accepted in such a case.

The EOI should be addressed to : Chairman
Nallur Pradeshiya Sabha,
Nallur.

**P.Vasanthakumar**
Chairman
Nallur Pradeshiya Sabha,
Nallur.
18.05.2012

(C-020)


வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் போரின் போது உயிரிழந்த முப்படையினருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று யாழ். பலாலி படைத்தலைமையகத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி உள்ளிட்ட விருந்தினர்கள் மரியாதை செலுத்துவதையும் போரில் உயிரிழந்த முப்படையினருக்கும் வடமாகாணத்தின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் அஞ்சலி செலுத்துவதையும் விருந்தினர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச்செய்தியாளர், என்.குமார்)

# 12 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

## 27 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினால் 12 வர்த்தகர்களுக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 27 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரி என். சிவசீலன் தெரிவித்துள்ளார்.

மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று இந்த 12 வர்த்தகர்களுக்கும் எதிராக் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் விலைப்பட்டியல் இன்றி சீனி விற்பனை செய்த மூன்று வர்த்தர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 9 ஆயிரம் ரூபாவும் காலாவதியான யோகட் விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு 4 ஆயிரத்து 500 ரூபாவும் ஏனைய வர்த்தகர்களுக்கு எதிராக பொருட்களை விலைப்பட்டியல் இன்றி விற்பனை செய்த குற்றச்சாட்டும் விலை கூட்டி விற்ற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டு அவர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நீதவானால்மேற்குறிப்பிட்ட வர்த்தகர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டிருந்தனர் எனவும் அவர் தெரிவித்தார். (அ-6)

# பொது விவகாரங்கள் போட்டியில் நெல்லியடி ம.ம.வி மாணவி தெரிவு



(கரவெட்டி)

சொன்ரா இன்ரநஷனல் (ZONTA INTERNATIONAL) இலங்கைக் கிளையினால் பாடசாலை மாணவிகளிடையே பொது விவகாரங்கள் தொடர்பான இவ்வருடத்திற்கான போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உயர்தர உயிரியல் பிரிவு மாணவி செல்வி சஞ்சிகா செல்வராசா தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

நாடளாவிய ரீதியில் சமூக வேலை ஈடுபாடு, பொதுத் தொண்டு, மாணவர் நடத்தைகள், தலைமைத்துவம் முதலானவற்றில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட ஆங்கில மொழிமூல மதிப்பீட்டின் அடிப்படையில் விசேட தகுதிகளையுடைய 16 மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிலிருந்து முதல் 3 இடங்களுக்குமான மாணவிகள் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்படவுள்ளது.

இதற்கான விருது வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெறவுள்ளது. (அ-7-24)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தி. தேவதயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடவுள்ளதால் கலந்துரையாடலுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (அ-3)

# தேடப்படும் குற்றவாளியால் குடும்பஸ்தர் மீது வாள்வீச்சு

(யாழ்ப்பாணம்)

வீதியிலே சென்று கொண்டிருந்தவரை பிரச்சினைப்படுத்தி வாளினால் வெட்டியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் வாள் வெட்டுச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் ஆவரங்கால் மேற்கில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த வேலாயுதம் ரஜினிகாந்த் ( வயது-32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் அருகிலுள்ள வீடொன்றில் கட்டட வேலை செய்துவிட்டு குறித்த பகுதியால் பயணித்துக்கொண்டிருந்த போது அருகில் நின்ற அதே இடத்தினைச் சேர்ந்த இளைஞனொருவன் குடும்பஸ்தரை அவதூறாக பேசியதோடு வாளினால் வெட்டியுள்ளார்.

இதில் கழுத்திலும் நெஞ்சிலும் கையிலும் படுகாயமடைந்த நிலையில் அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தரை வெட்டிய இளைஞர் ஏற்கனவே இருவருட சிறைவாசம் அனுபவித்தவர் என்றும் வேறொரு குற்றத்துக்காக பொலிஸாரினால் தேடப்படும் குற்றவாளியெனவும் தெரியவருகின்றது. (அ-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை புளிங்கூடல் இந்தன்பதி அருள்மிகு முத்து விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆல்ய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-9)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

நுணுவில்- சரசாலை சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)




# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கோண்டாவில் பிரதேசத்தின் மேற்குப் பகுதி, குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# பங்கீட்டட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் தற்போது நடப்பாண்டிற்கான புதிய பங்கீட்டட்டை வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இப்பிரிவில் வசிக்கும் மக்கள் தங்கள் பழைய பங்கீட்டட்டையினை தங்கள் பிரிவு கிராம அலுவலரிடம் ஒப்படைத்து புதிய பங்கீட்டட்டையினை பெற்றுக்கொள்ளுமாறும் அத்துடன் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் தங்களது அட்டையினை மீளாய்வு செய்து கொள்ளுமாறும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (அ-9)

# மத்தோனிப் பகுதியில் கொள்ளை

(கரவெட்டி)

கரவெட்டி மத்தோனி பகுதியில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் பட்டப் பகலில் ஓடு பிரித்து கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதில் 50 ஆயிரம் ரூபா பணமும் பெறுமதியான வீட்டுப் பொருட்களும் உள்ளடங்குகின்றன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டு உரிமையாளர்கள் பாடசாலைக்குச் சென்றவேளை இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் தமது கைவரிசையினை காட்டியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-3-24)


# திகதி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக் கல்வி அலுவலக கோப்பாய் கோட்டப் பாடசாலைகளில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த தரம் 12,13 க்கான வணிகக்கல்வி, தரம் 6-11 வரையான வரலாறு ஆகிய இரு பாடங்களுக்குமான செயலமர்வுகள் பிற்போடப்பட்டுள்ளது என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-7)

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## 17.05.2012 - 28.05.2013



## பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருபகவான் நெஞ்சம் மகிழும் வாழ்க்கையை அமைத்துத் தருவார்

**உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**வசதி வாய்ப்புகள் பெருகி வரும்! நண்பர்கள் வட்டத்தில் ஒரு தனி முத்திரையை பதித்து வைத்திருக்கும் மகர இராசி நேயர்களே!**

மனவலிமை அதிகம் பெற்றவர்கள் நீங்கள். சினம் உங்களுக்கு உடன்பிறப்பாக இருந்தாலும், குணத்தால் சிறந்தவர்கள் என்று புகழப்படுவீர்கள். மற்றவர்கள் சொல்வதை மறுப்புச் சொல்லாமல் நீங்கள் கேட்டுக்கொள்வதால், பலரும் தங்கள் குடும்ப தகவல்களை உங்களிடம் சொல்லி வைப்பார்கள்.

வாழ்வின் முற்பகுதியில் ஓரளவு பொருளாதாரநிலை இருந்தாலும், பிற்பகுதியில் மிதமிஞ்சிய பொருளாதாரத்தோடு வாழ்க்கை நடத்துவீர்கள். உடன்பிறப்புகள் மீது உங்களுக்கு பாசம் அதிகமாகவே இருக்கும்.

கடமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உங்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி ஆவல்களை பூர்த்தி செய்யும் விதத்தில் 5 ஆம் இடத்தில் உலா வருகிறது. குருவின் 9 ஆம் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே, பொன், பொருள் சேர்க்கையும், பொலிவான வாழ்க்கையும், அன்பு நண்பர்களின் ஆதரவும், அனுதினமும் கிடைக்கப் போகிறது.

உழைப்பிற்கேற்ப பலன் ஒருவருக்கு கிடைக்க வேண்டுமானால் குருவின் பார்வை பலம் தேவை. அந்த குரு உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். அதன் பார்வை 1, 9, 11 ஆகிய இடங்களை சேருகிறது. எனவே, அந்த இடங்களும் புனிதமடைகின்றன.

உங்கள் இராசிக்கு விரயாதிபதியாக குரு இருப்பதால், பார்க்கும் இடங்களில் எல்லாம் விரயங்களையும் கொடுக்கலாம். அந்த விரயம் நல்ல விரயமாக அமைய குரு கவசம் பாடி குருபக்வானை வழிபடுவதோடு, சுயஜாதகத்தில் தெசாபுத்திக்கேற்ப தெய்வ வழிபாடுகளையும் செய்து கொள்வது நல்லது. ஜாதகத்தில் இராகுதிசை மற்றும் வியாழதிசை நடப்பவர்கள் தகுந்த பரிகாரங்

## மகரம்



களைச் செய்துகொண்டால் முகுந்த யோகம் வந்து சேரும். இலாப ஸ்தானத்தில் இராகு சஞ்சரிப்பதாலும், குரு கேதுவுடன் கூடுவதாலும், சர்ப்ப சாந்தி பரிகாரமும் செய்தால், தடைகளில் இருந்தும் விடுபட இயலும்.

குருப் பெயர்ச்சி

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு இதுவரை 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த அர்த்தாஷ்டம குருவாக விளங்கிய குருபகவான், இப்பொழுது 17-05-2012 முதல் 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து உங்களுக்கு அற்புத வாழ்வை அமைத்துக் கொடுக்கப் போகிறது. உன்னதமான குருவின் ஆதிக்கம் உங்கள் எண்ணங்களை நிறைவேற்ற வேண்டுமானால் நல்ல இடங்களில் சஞ்சரிக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் பஞ்சம ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால், நெஞ்சம் மகிழும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க, வரும் முன்னதாகவே அதனை வழிபாடு செய்ய வேண்டும். யோகபலம் பெற்ற நாளில் கும்பிட்டால், யோகங்கள் வந்து சேரும் அல்லவா? எனவே, அவிட்ட நட்சத்திரமும், ஞாயிற்றுக் கிழமையும் இணையும் நாளில் குரு பரிகாரம் செய்வதன் மூலமும், குரு ஹோமங்களில் அன்றைய தினம் கலந்துகொள்வதன் மூலமும் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். மங்கல நிகழ்ச்சிகளும் மனையில் நடைபெறும்.

**ஐந்தாம் இடத்தில் அழியெடுத்து வைக்கும் குரு!**

உங்கள் இராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அவர் இப்பொழுது 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 5 -ம், 9 -ம் மிஞ்சும் பலன்தரும் என்பது பழமொழி. அதன்படி அதன் பார்வை பதியும் இடங்களான ஜென்மம் மற்றும் ஒன்பது, பதினொன்று ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன.

எனவே, நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் மாறும். உடல் நலத்திற்காக செலவிட்ட தொகை இனி குறையும். கருத்துவேறுபாடுகள் அகலும். கனிவோடு பேசி காரியங்களை சாதித்துக்கொள்ள வாய்ப்பு வாயிற் கதவைத் தட்டும்.

இதுவரை செய்த முயற்சிகளில் இருந்த தடைகள் அகலும். புதிய பாதை புலப்படும். சென்ற சில மாதங்களாக ஏற்பட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிவுக்கு வரும். மனக்கவலை மாற, மதிப்பும், மரியாதையும் அதிகரிக்க, இனத்தார் பகை அகல, இல்லம் தேடி இனிய செய்தி வர, மனதால் குருவை நினைத்து வழிபட்டு வந்தால் மகத்துவம் தரும் குருவின் சன்னிதிகளுக்கும், யோக பலம்பெற்ற நன்நாளில் சென்று வழிபட்டு வந்தால், யோகங்கள் படிப் படியாக வந்து சேரும்.

**ஐந்தினில் குருதான் வந்தால்,**<br>
**அனைத்திலும் வெற்றி கிட்டும்!**<br>
**பைதனில் பணமும் சேரும்,**<br>
**பாராளும் யோகம் வாய்க்கும்!**<br>
**வையகம் போற்றும் வண்ணம்,**<br>
**வாழ்க்கையும் அமையும் உண்மை!**<br>
**செய்தொழில் வளர்ச்சியாகும்,**<br>
**செல்வாக்கும் அதிகரிக்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் 5 ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கும்போது தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். அடிப்படை வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள திட்டம் தீட்டுவீர்கள். குடும்ப முன்னேற்றம் கருதி சில முக்கிய புள்ளிகளை சந்தித்து முடிவெடுப்பீர்கள்.

பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். சொந்தபந்தங்களின் ஒத்துழைப்போடு வந்த பிரச்சினைகளை தீர்த்து கொள்வீர்கள். கூட்டு முயற்சிகளில் இதுவரை இருந்த ஏமாற்றங்கள் இனி அகலும். உங்கள் இராசிக்கு விரயாதிபதியாகவும் குரு விளங்குவதால் உடல் ஆரோக்கியம் சம்பந்தமாகவும், உடன்பிறப்புகள் சம்பந்தமாகவும் திடீர் திடீரென விரயங்களை கொடுக்கலாம். குரு கேதுவோடு சேர்வதால் அந்த நேரம் வந்த உடனேயே மருத்துவ ஆலோசனை செய்து கொள்வது நல்லது. அஷ்டமத்தில் செவ்வாய் மற்றும் சனி சஞ்சரிக்கும் காலங்களில் குரு பரிகாரத்தோடு, அங்காரகனுக்கும், இராசிநாதனுக்கும் உரிய வழிபாடுகளை செய்தால் தங்கு தடைகள் அகலும். தனலாபம் வந்து சேரும்.

தொழில் முயற்சிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். வாழ்க்கைத் துணை அமைய எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிட்டும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும், வந்து சேரலாம்.

குருவின் பார்வை 1, 9, 11 ஆகிய இடங்களில் பதிவதால், அந்த இடங்கலெல்லாம் புனிதமடைகின்றன. தேவகுரு பார்த்துவிட்டால் தேடி வரும் செல்வம் என்று முன்னோர்கள் சொல்லி வைத்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். எனவே, குடும்பத்தில் குதூகலம் கூடும். தாய், தந்தை, பிள்ளை, மாமனார், மாமியார், கொழுந்தன் என்று அத்தனை உறவுகளிலும் இதுவரை இருந்து வந்த பிரச்சினைகள் அகலும்.

9 ஆம் இடத்தை பார்ப்பதால் தந்தை வழியில் அனுகூலம் கிடைக்கும். சிந்தையில் உங்களைப் பற்றி சிறிதளவும் நினைக்காத பெற்றோர்கள்கூட தாமாகவே முன்வந்து உதவி செய்ய வருவார்கள். பாயில் படுத்திருந்த தந்தை இனி பம்பரமாக பணியாற்றப் போகிறார். வாயில் தேடி நல்ல தகவல்கள் வந்து சேரப் போகிறது. பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும்.

இலாபஸ்தானத்தைப் பார்க்கும் குருவால் சேமிப்புகள் உயரும். தொழிலுக்கு இதுவரை பணப் பற்றாக்குறை ஏற்படுகிறதே என்று நினைத்த உங்களுக்கு இந்த குருப் பெயர்ச்சியால் மிதமிஞ்சிய பொருளாதாரம் உருவாகப் போகிறது. தேவைப் பட்ட பணத்தை தேவைப்பட்ட நேரத்தில் நண்பர்கள் கொண்டு வந்து கொடுப்பார்கள். பிறர் போற்றும் வகையில் வாழ்க்கைத்துணை அமையும். பூர்வபுண்ணியத்தின் பலனால் பொன்னும், பொருளும் பெருக

வைக்கும். இளைய சகோதரத்தால் இலாபம் கிடைக்கும்.

**வாட்டத்தைப் போக்குமா வக்ர குரு**

இடப இராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 12-10-2012 முதல் 06-02-2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 3, 12 க்கு குருபகவான் வக்ரம் பெறுவது, ஒரு வழிக்கு நன்மைதான். என்றாலும், சகாய ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குவதால் வளர்ச்சியும், தளர்ச்சியும், மாறி மாறி வரும். வளர்ச்சி வரும்பொழுது அதை ஏற்றுக்கொள்ளுங்கள். தளர்ச்சி வரும்பொழுது வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பொதுவாக இக்காலத்தில் செய்யும் காரியங்களை யோசித்து செய்வது நல்லது. சில இடையூறுகளை சந்திக்க நேரிடலாம். உடன்பிறப்புகள் உங்களுக்கு எதிராக செயற்படுவர். வழக்குகள் நீடிக்கும்.

நீண்ட தூரத்தில் இருந்து வரும் தொலைபேசித் தகவல்கள் நிம்மதியைக் குறைக்கலாம். நிச்சயிக்கப் பெற்ற சில செயல்களை மாற்றி அமைப்பீர்கள். குடும்பத்தினர்களை அனுசரித்து செல்ல வேண்டிய நேரமிது. கொள்கைப்பிடிப்பையும் சிறிது தளர்த்திக் கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம். இக்காலத்தில் முறையான குருவழிபாடும், சர்ப்ப சாந்தியும் உங்களுக்கு சந்தோஷத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

இந்தக் குருப்பெயர்ச்சியால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். நிகழ்காலத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பொருளாதார நிலை உயரும். கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரும். கௌரவப் பதவிகள் ஒரு சிலருக்குக் கிடைக்கும். வளர்ச்சிக்கு வித்திடும் மாற்று இனத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். சொல்பேச்சு கேட்காத பிள்ளைகள் உங்களது குணமறிந்து நடந்து கொள்வார்கள். குருவின் பார்வை பலத்தால் உற்சாகத்தோடு, பணிபுரிய இந்த குருப்பெயர்ச்சி வழி காட்டும். குரு கேதுவுடன் கூடி சஞ்சரிப்பதால், இராகு, கேது பரிகாரமும் திசை மாறிய தென்முகக் கடவுளை யோகபலம் பெற்ற நாளில் வழிபட்டு வருவதும் நல்லது.

**சிவல்புரி சிங்காரம்**

வளர்ச்சி தரும் வழிபாடு

5 ஆம் இடத்து குருவால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அரங்கேறவும், அன்றாட வாழ்க்கை நன்றாக அமையவும், வியாழன் தோறும் விரதமிருந்து குருவை வழிபட்டு வருவதோடு, தெட்ஷணாமூர்த்தியையும் வழிபடுங்கள். (தொடரும்)

## பண்டாரநாயக்க விமானநிலையத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெடுக்கப்படும் என்று சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள சிவில் விமான சேவைகள் அதிகாரசபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் போது விமான நிலையம் மூடப்படும் என்றும் விமான நிலையத்துக்கு அருகிலுள்ளோர் வேறு இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் இல்லை.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் அபிவிருத்திப் பணிகளுக்காகத் தற்காலிகமாக மூடப்படவுள்ளது.

அபிவிருத்திப் பணியின்போது ஓடு பாதைகள் அகலமாக்கப்படவிருப்பதுடன் விமானங்கள் தரிக்கும் இடங்களும் அதிகரிக்கப்படும். ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனம் இதற்கான கடனுதவியை வழங்கவுள்ளது.

இந்த அபிவிருத்திப் பணியின்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படாது. விமான நிலையத்தை மூடவிடாமல் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

இரண்டாவது கட்ட அபிவிருத்திப் பணிகளும் பூர்த்தியடைந்த பின்னர் பண்டாரநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்கு ஒருவருடத்தில் 12 மில்லியன் பேர் வந்துசெல்வார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

## இராஜாங்க செயலாளர் பிளேக்குடன் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சந்திப்பு

அமெரிக்காவுக்கு நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அமெரிக்காவின் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக்கை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இருவருக்குமிடையில் நேற்று முன்தினம் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அனைத் துலக உறவுகளுக்கான வூட்ரோ வில்சன் நிலையத்தில் உரையாற்றச் சென்றிருந்த போது றொபேட் ஓ பிளேக்குடனான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்த தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

இதற்கிடையே வோஷிங்டனில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான குழுவினர், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் பலரையும் சந்தித்து பேசி வருகின்றனர்.

குறிப்பாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளிநாட்டு உறவுகளுக்கான குழுவின் உறுப்பினர்களை சந்திப்பதில் பீரிஸ் ஆர்வம் காட்டி வருகின்றார்.

இந்தச் சந்திப்புக்களில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசுடன் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய, வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் சேனுக செனவிரத்தின, பீரிசின் இணைப்புச் செயலர் கம்லத் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். (அ-2)

## கொழும்பில் எரியுண்ட நிலையில் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு நாரஹன்பிட்டியில் நேற்று அதிகாலை எரியுண்ட நிலையில் மனித சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனம் ஒன்றில் இருந்து 26 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலமே மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் சடலத்தை அடையாளம் காணும் வகையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)



வடமாகாண தமிழ் மொழித்திறன் போட்டியில் தென்மோடிக்கூத்தில் இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்ட பூநகரி கறுக்காய்த்தீவு மகா வித்தியாலய மாணவர்கள், நெறிப்படுத்திய ஆசிரியர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- பூநகரிச் செய்தியாளர்)

## அழுகுரல் கூடமாக மாறிவிட்ட தமிழ் இனம் மிகுந்த அழகோடு எழுந்து உட்காரும்!

### அமைச்சர் வளர்மதி நம்பிக்கை

நமது முதல் அமைச்சரின் அறிவும் துணிவும் அவரை ஒருநாள் இந்தியாவின் உச்ச சிம்மாசனத்தில் உட்கார வைக்கத்தான் போகின்றது .

அப்போது ஈழம் என்னும் தேசம் எழுந்து உட்காரத்தான் போகின்றது என தமிழ்நாடு அரசாங்கத்தின் அமைச்சர் பா. வளர்மதி புகழாரம் சூட்டியுள்ளார்.

சென்னையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அ.தி.மு.க. விசா ஓராண்டு பூர்த்தி வெற்றிவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழ்நாடு சட்டசபையில் நடைபெற்ற ஜெயலலிதா அரசாங்கத்தின் ஓராண்டு பூர்த்தி விழாவில் அவரது அரசாங்கம் செய்த நல்ல திட்டங்கள் தொடர்பான படங்களும் விபரங்களும் அடங்கிய இறுவெட்டு ஒன்று வெளியிடப்பட்டது.

சட்டசபை சபாநாயகர் மேற்படி சிடியை முதல்வர் ஜெயலலிதாவிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

நமது முதல்வர் ஜெயலலிதா இது வரைக்கும் எதற்கும் அஞ்சியதில்லை. முன்னைய ஆட்சியாளர்களின் ஆதரவாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த 250 கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியுள்ள சொத்துக்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

நமது முதல்வருடைய அறிவும் ஆற்றலும் தான் அவரை அரசியலுக்கு அழைத்து வந்துள்ளது. அவருடைய அறிவும் துணிவும் இந்த சிம்மாசனத்தில் அமர்த்தியுள்ளது.

எதிர்காலத்தில் அம்மா அவர்கள் இந்தியாவின் உச்ச சிம்மாசனத்தில் ஒரு நாள் அமரத்தான் போகின்றார். அப்போது சுதந்திரப் பறவைகளின் பாட்டரங்கமாக முன்னர் திகழ்ந்து தற்போது அழுகுரல் கூடமாக மாறிவிட்ட தமிழீழம் மிகுந்த அழகோடு எழுந்து உட்காரும் என்றார். (அ-2)

## ஆட்டோ- லொறி விபத்து; மூவர் பலியாகினர்

பெல்மதுளை ரில்ஹேன பிரதேசத்தில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி- லொறி விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் பலியாகியுள்ளர். இச்சம்பவம் கடந்த 15 ஆம் திகதி மாலை பலாங்கொடையில் இருந்து இரத்தினபுரி நோக்கிச் சென்ற போதே ஏற்பட்டுள்ளது.

பலாங்கொடை வெலிக்கபொல அட்டனிகல பிரதேசத்தை சேர்ந்த பியந்த மிட்டவெல ( வயது 72) , அவரது மனைவி புஞ்சிமெனிக்கே (வயது-52), இவர்களின் மகனும் முச்சக்கரவண்டி சாரதியுமான ஹரேந்திரகுமார (வயது-34) ஆகிய மூவருமே இவ்வாறு இறந்துள்ளனர்.

பெல்மதுளை வைத்தியசாலைக்கு இவர்கள் கொண்டுசெல்லப்பட்டபோதும் சிகிச்சை பலனளிக்காது மூவரும் இறந்துள்ளனர். காவத்தை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை நடைபெற்றது. (அ-9)

## பலாலி ஆசிரியர் கலாசாலையை சொந்த இடத்தில் இயக்க நடவடிக்கை எடுங்கள்

### கூட்டமைப்பு கல்வி அமைச்சருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையானது அதன் பழைய இடத்திலேயே இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோர் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்து கடிதம் அனுப்பியுள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இவ்வாசிரிய கலாசாலையானது நீண்ட காலமாக ஆசிரியர்களை உருவாக்கி வருகின்றது. இதன்மூலம் வடக்கு, கிழக்கு பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் கணித, விஞ்ஞான மற்றும் ஆங்கில ஆசிரியர்களை உருவாக்கி சேவையாற்ற அனுப்பியுள்ளது.

இவர்கள் நாடு முழுவதிலும் தமது சேவைகளை ஆற்றி வருகின்றனர்.

ஆயினும் இக்கலாசாலையானது நீண்ட காலமாக சொந்த இடத்தில் இயங்க முடியாமல் தற்காலிகமாக திருநெல்வேலியில் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

இக்கலாசாலை உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினர் அதனை மீள ஒப்படைக்க வேண்டும் எனவும் 55 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இந்நிலப்பரப்பானது படையினர் வசம் உள்ளது.

எனவே உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அபகரித்துள்ள இக் கலாசாலையினை மீண்டும் இயங்கச் செய்வதன் மூலம் பாடசாலை சமூகம் முன்னேற்றமடைய முடியும் எனவும் அவர்கள் கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (அ-7)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 132

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

எல்லா இடங்களிலும் பால்டிக் குடியரசுகளின் மக்கள் சோவியத் போர்வீரர்களை மகிழ்ச்சியோடு வரவேற்றனர். பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் கொரில்லாப்படை வீரர்கள் துருப்புகளுக்கு பெரிதும் உதவினர். லாத்வியாவில் சுமார் 20 ஆயிரம் கெரில்லாப்படை வீரர்கள் இருந்தனர். இவர்கள் 350 எதிரி இராணுவ புகைவண்டிகளைக் கவிழ்த்தனர், 87 டாங்கிகள், கவசமோட்டார்களை பழுதடையச் செய்தனர்; 45 ஆயிரம் பாசிஸ்டுகளை கொன்றனர்; காயப்படுத்தினர். 1945 மே மாதம் லாத்வியப் பரப்பு முழுவதும் பாசிஸ்டுகளிடமிருந்து தூய்மைப் படுத்தப்பட்டது.

லித்துவேனியாவில் சுமார் 10 ஆயிரம் கெரில்லாப்படை வீரர்கள் செயற்பட்டனர். ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் பேர்ராட்டம் நடந்த ஆண்டுகளில் இவர்கள் 577 என்ஜின்களையும் 3 ஆயிரத்துக்கும் அதிகமான இரயில் பெட்டிகளையும் பழுதடையச் செய்தனர். 18 எதிரி படையிருப்புகளை நொறுக்கித் தள்ளினர். 14 ஆயிரத்துக்கும் கூடுதலான பாசிஸ்டுகளையும் அவர்களின் கூட்டாளிகளையும் கொன்றனர், காயப்படுத்தினர். 1945 ஜனவரி 28இல் சோவியத் இராணுவம் மேமெலைக் கைப்பற்றி லித்துவேனிய சோவியத் சோஷலிச குடியரசை முழுமையாக விடுவித்தது.

எஸ்தோனியக் கொரில்லாப்படை வீரர்களும் வெற்றிகரமாக இயங்கினர். இவர்கள் வேவு பார்த்தனர், ஜேர்மனியப் போக்குவரத்து மார்க்கங்களைத் தாக்கினர், பாலங்களைத் தகர்த்தனர், எதிரியின் இராணுவ புகைவண்டிகளை கவிழ்த்தனர், எதிரியின் படையிருப்பிடங்களை அடித்து நொறுக்கினர்.

சோவியத், பால்டிக் குடியரசுகளை விடுவிக்கும் போர்த்தந்திர நடவடிக்கை அளவில் பெரிதாக இருந்தது. இதில் 5 சேனைகளின் துருப்புகளும் செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கப்பற்படையும் பங்கேற்றன. இவை ஆயிரம் கி.மீ. நீளமுள்ள போர்முனையில் இயங்கின. தாக்குதலின்போது சேனைகள் மற்றும் சேனைத் தொகுதிகளின் ஒரே நேர, தொடர்ச்சியான நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.


போர்த்தந்திர தாக்குதலின் போது ரீகா திசையிலிருந்து மேமெல் திசைக்கு பெருமளவு துருப்புகளை இடமாற்றம் செய்ததானது, சோவியத் போர்க் கலையின் பெரும் சாதனையாக அமைந்தது. இத்திசையில் குறுகிய காலகட்டத்தில் 4 படைகள், இரண்டு தனி டாங்கி கோர்பஸ்கள், 1 இயந்திரப்படை கோர்பஸ், ஏராளமான பலப்படுத்தும் சாதனங்கள் ஆகியவற்றைக்கொண்டு வந்து குவித்ததானது, சோவியத் துருப்புகள் வெற்றிகரமாகத் திடீர்த் தாக்குதல் தொடுக்க வகைசெய்தது. கடலோரத் திசையில் எதிரியின் பெரும் போர்த் தந்திரப் படைத்திரட்டை சுற்றி வளைத்ததும் சோவியத் போர்க் கலையின் சற்றும் குறையா முக்கியத்துவமுடைய சாதனையாகத் திகழ்ந்தது. இது ஒரே நேரத்தில் மேமெல் திசையில் 1-வது பால்டிக் சேனையின் எல்லாச் சக்திகளாலும் வெற்றிகரமாகப் பிளந்துகொண்டு சென்று சுற்றிவளைத்துச் சென்றதன் மூலமாயும் எதிரி படைத் திரட்டின் இன்னொரு பக்கவாட்டில் 3-வது, 2-வது பால்டிக் சேனைகளின் நடவடிக்கைகளாலும் அடையப்பட்டது. கடலோரத்திசையில் சுற்றிவளைக்கப்பட்ட துருப்புகளை வெற்றிகரமாக ஒழித்துக்கட்ட எதிரியைத் தரையிலும் வானிலும் தனிமைப்படுத்துவதோடு கூட கடலிலிருந்தும் முற்றிலுமாக முற்றுகையிட வேண்டுமென இந்நடவடிக்கை அனுபவம் காட்டியது.



சோவியத் சுவரொட்டி

நடவடிக்கையில் ஒரு சில குறைபாடுகளும் இருந்தன. இதனால் வடக்கு படைத் தொகுதியை முற்றிலுமாக முறியடிக்க இயலவில்லை. உதாரணமாக தாக்குதலுக்கான திட்டம் தீட்டும் போது எதிரி படைத்திரட்டைப்பிளந்து பகுதிபகுதியாக அதை ஒழித்துக்கட்டும் பொருட்டு ஆழ்ந்த நேரடித் தாக்குதல்கள் திட்டமிடப் படவில்லை. நடவடிக்கையின் ஆரம்பத்தில் தாக்கும் துருப்புகளால் நேரடி நடைமுறை மண்டலத்திலும் அருகேயிருந்த உட்பகுதிகளிலும் எதிரிக்குப் பலத்த தோல்வியை ஏற்படுத்த முடியவில்லை. தற்காப்பின் உட்பகுதியில் தயாரிக்கப்பட்ட எல்லைகளைப் பிளந்து செல்லும் போது 2-வது, 3-வது பால்டிக் சேனைகளின் இராணுவ நடவடிக்கைகள் இந்த எல்லைகளைத் தொடர்ச்சியாக குதறும் வடிவத்தில் நடத்தப்பட்டதேயன்றி உட்பகுதி முழுவதும் ஒரே நேரத்தில் தாக்குவதன் மூலம் நடத்தப் படவில்லை.

பால்டிக் குடியரசுகளை விடுவிப்பதில் சோவியத் இராணுவம் பெற்ற போர் அனுபவம் யுத்தத்தின் இறுதி நடவடிக்கைகளில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டது.

சோவியத் வீரர்களின் நினைவாலயம்


**பெட்சாமோ-கீர்கெனெஸ் நடவடிக்கை (1944 அக்டோபர் 729)**

எதிரியின் நார்வே படைத்திரட்டை முறியடித்து வடக்கே சோவியத் யூனியனின் எல்லைகளைப் புனர் நாட்டுவதுதான் இந்நடவடிக்கையின் இலட்சியமாகும்.

போர்த்தந்திர மூலப் பொருட்கள் நிறைந்திருந்த பிரதேசங்களை எப்படியாவது தம் கைவசம் வைத்திருக்க ஹிட்லரின் படைத் தலைமை முயன்றது. பனிக்காலத்திலும் கூட உறையாத வடக்கு கடல் துறைமுகங்கள் இங்கேதான் இருந்தன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு பாசிச ஜேர்மனியுக் கப்பற்படையால் வடக்குப் போக்குவரத்து மார்க்கங்களில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது.

மலைப்பாங்கான, காடுகளடர்ந்த, ஏரிகளும் சதுப்பு நிலங்களும் நிறைந்திருந்த, கடினமான சூழ்நிலைகளில், எதிரி, மூன்று ஆண்டுகளில் பெருமளவு நீண்ட கால பீரங்கி சுடுமிடங்கள், மரத்தாலான பீரங்கி சுடுமிடங்களோடு கூடிய பலத்த, பல படை வரிசைகளை உடைய தற்காப்பை ஏற்படுத்தியிருந்தான். 20-வது ஜேர்மனிய மலையேற்றப் படையின் 19-வது மலையேற்ற கோர்பஸ் தற்காப்பில் நின்றது.

10 இலட்சத்துக்கும் அதிகமான எறிகணைகள் வீழ்ந்த லாத்வியாவின் நகரின் ஒருபகுதி


வடக்கு நார்வே துறைமுகங்களில் ஜேர்மனியர்களின் பெரும் கடற்படைச் சக்திகள் நின்றன.

(தொடரும்)

இரண்டாவது உலக யுத்தத்தின்போது சேதமடைந்த உலகின் வடக்குக் கோட்டை


# பிரிட்டனுக்கு மஹிந்தவை அழைக்கின்றமை வேதனை தருவதாக அமைந்துள்ளது

## பிரித்தானிய தமிழர் அமைப்பு கவலை

**பிரித்தானிய மகாராணியின் வைரவிழாவிற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டுள்ள செய்தியானது மிகுந்த வேதனையை தருவதாக பழைமைவாதிகளுக்கான பிரித்தானிய தமிழர் அமைப்பு தெரிவித்துள்ளது.**

இரண்டாம் எலிசபெத் மகாராணியார் அரச பொறுப்பேற்று 60 ஆவது ஆண்டு நிறைவானதை முன்னிட்டு ஜூன் 2 தொடக்கம் 5 வரையான நான்கு நாட்கள் கொண்டாடப்படவுள்ளதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

தனது ஆட்சியில் வைரவிழாவை நிறைவு செய்யும் பிரித்தானிய மகாராணியாரை வாழ்த்தி மேற்கொள்ளப்படவுள்ள இம் முக்கிய விழாவில் பங்குபற்றுமாறு யுத்தக் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட போது முப்படைகளினதும் பிரதம நிறைவேற்று தளபதியாக விளங்கிய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இம்முக்கிய நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி அழைக்கப்பட்டுள்ள செய்தியானது மிகுந்த வேதனையை தருவதாக இலங்கையில் வாழும் தமிழ்மக்கள் தொடர்பிலும் அவர்களுக்கு நீதி, சமாதானம் மற்றும் சுய கௌரவம் என்பன வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் விழிப்புணர்வை மேற்கொண்டு வரும் பழைமைவாதிகளுக்கான பிரித்தானிய தமிழர் அமைப்பு தெரிவித்துள்ளது.

பழைமைவாதிகளைப் பொறுத்தளவில் அவர்கள் மற்றவர்களின் தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடுவதை விரும்பமாட்டார்கள்.

இந்நிலையில் யுத்த மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்தக்கு எதிரான மீறல்களை மேற்கொண்டவர்கள் எனக்குற்றம் சாட்டப்பட்டவர்கள் மகாராணியாரின் 60 ஆவது ஆட்சி நிறைவைக் கொண்டாடும் விழாவில் விருந்தாளியாக அழைக்கப்படுவதை நாம் விரும்பவில்லை.

பிரித்தானிய மகாராணியாருக்கு மதிப்பு வழங்கும் இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது தொடர்பில் அதிருப்தி அடையும் பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள் மற்றும் இது தொடர்பில் கவலை கொள்ளும் ஏனைய மக்கள் அனைவரும் உடனடியாக தமது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும்.

நான்கு நாட்கள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு ஜூன் 3 அன்று பிரித்தானியா வரவுள்ள மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டு அரச அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷ தனது பிரித்தானியப் பயணத்தின்போது அந்நாட்டின் உயர்மட்ட அரச அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடுவதென்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## ஈழத்தில் தாயக உரிமையை வலியுறுத்தி மெரீனா கடற்கரையில் கையெழுத்து

(சென்னை)

ஐ.நா. மேற்பார்வையில் ஈழத் தமிழர்களின் தாயக உரிமைக்கான பொது வாக்கெடுப்பினை நடத்தக்கோரி போர்க்குற்றம், இனப்படுகொலைக்கு எதிரான இளைஞர்கள் சார்பில் ஒரு கோடி கையெழுத்து இயக்கத்தின் தொடக்க நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வு நேற்றுமாலை 6 மணியளவில் மெரீனா கடற்கரையில் காந்தி சிலைக்கு அருகில் நடைபெற்றது.

இந்தியப் பொதுவுடைமைக்கட்சியின் மூத்த தோழர் நல்லக்கண்ணு முதல் கையெழுத் தினை இட்டு இந்நிகழ்வினை ஆரம்பித்து வைத்தாார்.

இரண்டாம் கையெழுத்தினை பழ. நெடுமாறனும் மூன்றாம் கையெழுத்தினை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் தோழர் வைகோவும் இட்டனர்.

மெரீனா கடற்கரைக்கு வந்திருந்த பொது மக்களிடம் அமைப்பின் தோழர்கள் ஈழ விடுதலையின் அவசியத்தை வலியுறுத்தி விளக்கி துண்டறிக்கையினை கொடுத்து கையெழுத்திட வைத்தனர்.

பொதுமக்களும் பாடசாலை, கல்லூரி மாணவ மாணவியர்கள் பலரும் தமிழீழத்திற்கான தம் ஆதரவினை தெரிவித்து கையெழுத்திட்டனர். தமிழக பொலிசில் இருக்கும் உணர்வாளர்களும் தமிழீழத்துக்கான தங்கள் ஆதரவினை தெரிவித்து கையெழுத்தினை இட்டது தோழர்கள் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியினை ஏற்படுத்தியது. (அ-2)

## முள்ளிவாய்க்கால் மூன்றாண்டு நிறைவு இன்று; இலங்கைத்தூதரகத்திற்குப் பாதுகாப்பு அங்கு

(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் பேரழிவின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவம் மேற்கொண்ட போர் 2009 மே 18 ஆம் திகதி முடிவுக்கு வந்தது. இந்த இறுதிப் போரின் போது ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை இராணுவம் கொன்று குவித்தது.

முள்ளிவாய்க்காலில் படையினரால் கொன்றழிக்கப்பட்ட தமிழ்மக்களை நினைவுகூரும் வகையில் தமிழ் நாட்டில் உள்ள தமிழ் அமைப்புகள், மனித உரிமை இயக்கங்கள் பல்வேறு நினைவு நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

இந்நிலையில் சென்னை ஆழ்வார் பேட்டை டி.டி.கே வீதியில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்துக்கான பாதுகாப்பை தமிழ்நாடு பொலிஸ் அதிகரித்துள்ளது. அத்துடன் எழும்பூரில் உள்ள இலங்கை வங்கி ,மகாபோதி நிலையம் உள்ளிட்ட இலங்கை நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இங்கு வழக்கத்தை விட அதிகளவு பொலிஸார் பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் இலங்கை சார்ந்த பணியகங்களுக்கு வரும் பொதுமக்களும் பொலிஸாரின் சோதனைக்குப் பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். (அ-2)

## சரத்தின் விடுதலையை பொறுத்திருந்து பாருங்கள்

### ஊடகத்துறை அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

சரத்பொன்சேகாவின் விடுதலை குறித்த நடவடிக்கைகள் தொடர்பில் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என பதில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சரத்பொன்சேகாவின் விடுதலை தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுவார் என தனியார் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாகவும் அது குறித்து ஜனாதிபதியும் எந்த விமர்சனமும் முன்வைக்கவில்லை எனவும் எதிர்கால நடவடிக்கைகளை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (அ-2)

## போர்க்களத்தில் தர்மத்தை பின்பற்றினார்களாம்!

### கதையளக்கின்றார் லொக்குபண்டார

(கொழும்பு)

போர்க்களத்திலும் தர்மத்தின் அடிப்படையிலேயே செயற்பட்டோம் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.


தாய்நாட்டுக்கே உயிர்நீத்த மற்றும் உடல்களை தானம் செய்த படை வீரர்களுக்கு வேலைத்தளம் , பாடசாலை உள்ளிட்ட சகல இடங்களிலும் தங்களது கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். படைவீரர்களின் அர்ப்பணிப்பிற்கு எவ்வளவு மலர்களைக்கொண்டு பூசித்தாலும் போதாது.


நந்திக்கடல் . புதுமாத்தளன் பற்றி பேசும் நபர்களுக்கு நாம் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். வரலாற்றுக் காலம் முதல் நாம் தர்ம நெறியின் அடிப்படையிலேயே போரில் ஈடுபட்டோம்.

போரின் பின்னரான காலப்பகுதியில் எமது உள்ளங்களில் கருணை மலர வேண்டியது அவசியமானது. குரோத உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய வார்த்தைகளை வெளியிடக்கூடாது என ஆளுநர் லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி புதிய நகரம் படைவீரர் நினைவுத்தூபிக்கு அருகாமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)







கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் நடப்பாண்டுக்கான விஞ்ஞான கண்காட்சி அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது பாடசாலை அதிபர் அ. பங்கயற்செல்வன் கண்காட்சியை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அதிபர், பிரதி அதிபர் திருமதி பு. குமார், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் இராமமூர்த்தி ,ஆகியோர் பார்வையிடுவதையும் மாணவர்களின் கண்காட்சியினையும் படங்களில் காணலாம்.

# பொன்சேகாவின் விடுதலைக்கு சர்வதேசமே காரணம்

## சிஹல உறுமயவின் தலைவர் கூறுகிறார்

சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இலங்கை அரசாங்கம் விடுதலை செய்யவுள்ளதாக நவ சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனைத் தவிர சரத் பொன்சேகாவின் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸின் கோரிக்கையின் அடிப்படையிலேயே சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுகிறார் என்ற அரசாங்கத்தின் கருத்து வெறும் ஏமாற்றாகும்.

சரத் பொன்சேகா கைது செய்யப்பட்ட தினத்தில் இருந்தே அவரை சர்வதேசம் அரசியல் கைதியாகவே பார்த்தது. எனவே, இதில் டிரான் அலஸின் உதவி காரணமாகவே சரத் பொன்சேகா விடுதலையாகிறார் என்ற தகவல் பொய்யானது.

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட வேண்டுமானால் அவரின் மனைவி அல்லது உறவினர்கள் கோரிக்கை விடுக்க வேண்டும் என்று டிரான் அலஸ் உடனான சந்திப்பின்போது ஜனாதிபதி கூறியிருந்தமையையும் மனமேந்திரா சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்துமாம்

## பிரதான எதிர்க்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்தத் தீர்மானம் எடுத்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் இந்தப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமை [illegible] எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு [illegible]யில் கொழும்பில் நடைபெற்ற [illegible]த்தில் இந்தப் போராட்டம் தொட[illegible] தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் முதல் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கருத்தரங்குகள், போராட்டங்கள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் மக்களை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு இந்தப் போராட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# ஔடதங்கள் சட்டமூலம் விரைவில் கையளிக்கப்படும்

## சட்டவாக்க திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய ஔடத சட்ட மூலத்தை தயாரிக்கும் நடவடிக்கைகள் இறுதி செய்து ஒரு வாரகாலத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக சட்டவாக்க திணைக்களம் சுகாதார துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் அறிவித்துள்ளது.

சுகாதாரத்துறை அமைச்சினால் தேசிய ஔடத சட்டமூலத்தை தயாரித்து அதனை மேலதிக ஆய்வுக்காக சட்டவாக்க திணைக்களத்திடம் ஒப்படைத்து ஒரு வருடம் கடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சட்டமூலத்தை ஆய்வு செய்து வழங்குவதற்கு காலதாமதம் ஏற்பட்டமை தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் சட்டவாக்க திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது தகவல் வெளியிட்ட திணைக்கள அதிகாரிகள் தமது அமைப்பில் பணியாற்றிய சட்டவாக்க நிறைவேற்றாளர்கள் ஓய்வு பெற்றமையே தாமதத்திற்காக காரணம் என தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் முன்னாள் சட்டவாக்க நிறைவேற்றாளர் தயாரித்த தேசிய ஔடத சட்டமூலம் தம்மிடம் இருக்கின்ற நிலையில் அதனை எதிர்வரும் வாரமளவில் இறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

திருத்தச் சட்டமூலம் தமது அமைச்சுக்கு கிடைத்த பின்னர் அதனை அமைச்சரவைக்கும் நாடாளுமன்றத்திற்கும் சமர்ப்பித்து அனுமதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என சுகா தாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ-2)

# 2012.05 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1565-ஒட்டோமான் படைகள் மால்ட்டாவை அடைந்தன. மால்ட்டாவின் ஆக்கிரமிப்பு ஆரம்பமாகியது.

★ 1652- வட அமெரிக்காவிலேயே முதன் முதலில் அடிமைத் தொழிலை இல்லாதொழிக்கும் சட்டத்தை ரோட் தீவு கொணர்ந்தது.

★ 1765-கனடாவின் மொன்ட்றியால் நகரத்தின் பெரும்பகுதி தீயினால் அழிந்தது.

★ 1880-எடிசனின் போனோகிராஃபின் காப்புரிமப் படிமம் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1803- ஐக்கிய இராச்சியம் பிரான்ஸ் மீது போரை அறிவித்தது.

★ 1804-முதலாம் நெப்போலியனை பிரெஞ்சு மன்னனாக செனட் தெரிவு செய்தது.

★ 1869- ஏசோ குடியரசு கலைக்கப்பட்டு ஜப்பானுடன் இணைக்கப்பட்டது.

★ 1896- கோடின்கா துயரம்: ரஷ்ய மன்னன் இரண்டாம் நிக்கலாசின் முடிசூடும் நிகழ்வுக் கொண்டாட்டத்தின் போது "கோடின்கா" என்ற இடத்தில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி ஆயிரத்து 389 பேர் உயிரிழந்தனர்.

★ 1897-ஐரிய எழுத்தாளர் பிராம் ஸ்டோக்கர் எழுதிய டிராக்குலா புதினம் வெளியிடப்பட்டது.

★ 1900- தொங்கா ஐக்கிய இராச்சியத்தின் பகுதியாக்கப்பட்டது.

★ 1910-ஹேலியின் வால்வெள்ளியின் வாலினூடாக பூமி சென்றது.

★ 1927- மிச்சிகனில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு நிகழ்வில் பெரும்பாலும் குழந்தைகள் அடங்கிய 45 பேர் உயிரிழந்தனர்.

★ 1944- கிரிமிய தார்த்தார்கள் சோவியத் அரசினால் வெளியேற்றப்பட்டனர்.

★ 1956- உலகின் 4 ஆவது பெரிய மலையான லகோத்ஸே மலையின் உச்சியை முதன் முதலில் சுவிட்சர்லாந்து மலையேறிகள் எட்டினர்.

★ 1969- அப்பல்லோ 10 விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1974- சிரிக்கும் புத்தர் என்ற பெயரிடப்பட்ட திட்டத்தில் இந்தியா தனது முதலாவது அணுகுண்டை வெற்றிகரமாக சோதித்தது.

★ 1980- வோஷிங்டனில் சென் ஹெலன்ஸ் மலை தீ கக்கியதில் 57 பேர் உயிரிழந்தனர். 3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சேதம் ஏற்பட்டது.

★ 1990-பிரான்சில் TGV தொடருந்து உலகின் அதியுயர் வேகத்தில் (515.3 கி.மீ/மணி) சென்றது.

★ 1991- ஹெலன் ஷார்மன் விண்வெளிக்குச் சென்ற முதலாவது பிரித்தானியர் என்ற பெருமையை பெற்றார்.

★ 1991-வடக்கு சோமாலியா சோமாலிலாந்து என்ற பெயரில் மீதமான சோமாலியாவில் இருந்து விடுதலையை அறிவித்தது. ஆனாலும் அனைத்துலகம் இதனை அங்கீகரிக்கவில்லை.

★ 2006-நேபாளம் மதசார்பற்ற நாடாகவும் அதன் மன்னர் ஒரு சம்பிரதாய மன்னராகவே இருப்பாரெனவும் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேறியது.

★ 2009-ஈழப்போர் முடிபுக்கு வந்ததாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதன் போது 53 ஆயிரத்திற்கும் மேற்பட்பட்ட பூர்வகுடி தமிழ் மக்களை கொன்ற தினம் என தமிழர்கள் குற்றம் சாட்டிய தினம்.

### பிறப்புக்கள்

★ 1048- ஒமார் கையாம்,பார்சியக் கவிஞர், கணிதவியலாளர் (இ.1131)

★ 1908-இயான் பிளெமிங், ஆங்கில எழுத்தாளர் (இ.1964)

★ 1920-திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் (இ.2005)


★ 1913-நீலம் சஞ்சீவ் ரெட்டி, இந்தியாவின் 5 ஆவது ஜனாதிபதி (இ.1996)

★ 1939- பீற்றர் குருன்பெர்க், ஜேர்மனிய இயற்பியலாளர்

### சிறப்பு நாட்கள்

★ அனைத்துலக அருங்காட்சியக தினம்

★ போர்க்குற்ற தினம் (தமிழீழம்)



★ 1933- இந்தியாவின் 11 ஆவது பிரதமர் தேவகவுடா பிறந்த தினம்

# என் மக்களின் தார்மீக அறத்தை உயிர் வாழவைப்பதற்காகவே எழுதுகிறேன்

## இலங்கை சிங்கள - ஊடகவியலாளர், பாஷண அபேவர்த்தன

**... மே 2009 நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான உங்களது எதிர்வினை என்ன? அப்பொழுது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?**

எனது தலைமறைவு வாழ்க்கையில் முதல் மூன்று வருடங்களும் நான் தொடர்ச்சியாக ஒன்றிரண்டு சிங்களப் பத்திரிகைகளுக்கு பத்திகளும் ஆய்வுக்கட்டுரைகளும் எழுதிவந்துள்ளேன். என்னைப் போன்றவர்களின் குரல்களும் வெளிவருவதற்கு ஓரளவான ஜனநாயக வெளியை வைத்திருப்பதற்கு இந்தப் பத்திரிகைகள் முயல்கின்றன. இவற்றில் ஒவ்வொரு கிழமையும் வன்னியில் என்ன நடக்கிறது என்பதையும் அந்த அழிவுகளையும் கொடூரங்களையும் எழுதினேன். இவை வெறுமனே தமிழ்மக்களை என்ன செய்கிறார்கள் என்பதை வெளியிடும் கட்டுரைகளல்ல. மாறாக என் மக்களின் தார்மீக அறத்தை உயிர் வாழவைப்பதற்கான அவாவினாலான ஒரு போராட்டமே. இந்த இடத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்,

தென்பகுதியில் நடைபெற்ற தொடர்ச்சியான முடிவற்ற வன்முறைக் காலச் சூழல்களில் வளர்ந்த தலைமுறையைச் சேர்ந்தவன் நான். பயங்கரமான காலங்களினூடாக வாழ்ந்திருக்கிறேன். மிகவும் கோரமான, காட்டுமிராண்டித்தனமான சம்பவங்களின் சாட்சியாக நான் இருக்கிறேன். ஆனால், 2009 விதிவிலக்கானது. என்னுடைய வாழ்க்கையில் மிகவும் நிம்மதியிழந்த மனச் சோர்வடைந்து வாழ்ந்த காலங்கள் அவை. அப்பொழுது மனிதர்களுக்கு நடந்த பயங்கரமான துன்பங்களும் சோகங்களும் அழிவுகளின் அளவுகளும் கணக்கிடவோ கற்பனை செய்யவோ முடியாதவை. இந்தப் பேரழிவுகளினதும் இன அழிப்பினதும் தினசரிச் செய்திகள் உள்வாங்கவோ, கூறவோ முடியாதளவிற்கு மோசமானவையாக இருந்தன. ஆனால், இவற்றைப்பற்றித் தெற்கில் இருந்த அறியாமைக்கும் அவற்றைப் புரிந்துகொள்ள முடியாதளவிற்கு உணர்வில்லாதவர்களாக இருந்ததற்கும் சாட்சியாக இருந்தமை என்னை மிகவும் பாதித்தது. மிலேச்சத்தனமான வன்முறைகளால் பாதிக்கப் பட்டவர்களாக நீங்கள் இருக்கும்போது குறிப்பிடத்தக்களவு தர்மீக அறத்தை உணரக்கூடியவர்களாக நீங்கள் இருப்பீர்கள். ஏனெனில் என்ன நடந்திருக்குமென உங்களுக்குத் தெரியும். நீங்கள் எந்த விதமான மனப்பாதிப்பில் இருந்தபோதும், அழிவானது உடல் ரீதியாக இருப்பின் உங்களது விதியை நீங்களே காணக் கூடியவராக இருப்பீர்கள். ஆனால், மோசமான போர் வன்முறை மற்றும் பாலியல் குற்றங்களைப் புரிந்தவர்களினூடான ஒரு சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராக நீங்கள் இருக்கும்போது, உங்கள் சமூகத்தின் கூட்டு ஆன்மாவானது இவ்வாறான மிருகத்தனமான, பயங்கரமான போர்க்குற்றங்களைப் புரிந்தவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றபோது, இவ்வாறான போர்க்குற்றங்கள் புரிந்தவர்களின் உணர்ச்சிகளைப் பகிர்ந்தும் பகிராததற்கும் அப்பால், அவர்களின் குற்றங்களைக் கூட்டாக நியாயப்படுத்தும் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றபோது நீங்கள் நியாயப்படுத்தும் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றபோது, நீங்கள் தார்மீக அறந்தொடர்பான அதல பாதாளப் படுகுழியில் வீழ்வீர்கள். ஏனெனில், நீங்கள் எவ்வாறு உங்கள் தோலை உரித்துக் கொண்டு, எவ்வாறு வெளியில் வரமுடியாதோ அப்படித்தான் சமூகத்தின் கூட்டு அடையாளத்திலிருந்தும் நீங்கள் உடனடியாகப் பாய்ந்து வெளிவர முடியாது.

நாம் எந்த விதமான குறிப்பிடத்தக்க எதிர்ப்புகளையும் காட்டாது இருந்தமையானது இவ்வாறான அழிவுகள் நடைபெறுவதற்கு நாமும் உடந்தையாக இருந்ததையே காட்டுகிறது.. சுய சீரழிவு நமக்குள் ஏற்படுவதற்கு இந்தநிலை காரணமாக இருக்கின்றது. இது தார்மீக, அறம் தொடர்பானது. ஆகவே, வெளியே தெரியாது. இவ்வாறான இனப்படு



**முள்ளிவாய்க்கால் அவலங்கள் அடங்கிய கைபேசி வீடியோவை சனல்-4 இற்கு வழங்கிய, "*இலங்கையில் ஜன நாயகத்திற்கான பத்திரிகையாளர்கள்*" (Journalists for Democracy in Srilanka-JDS) என்ற நிறுவனத்தின் ஊடகவியலாளர் பாஷண அபேவர்த்தனவுடனான நேர்காணல்**

கொலையும் அழிப்பும் போர்க் குற்றங்களும் நடப்பது தொடர்பான சிறிதளவான அக்கறைகூடக் காட்டாமல் விட்டமையால், நாம் கூட்டுச் சமூகமாக இருக்கிறோம் என்பதைக் கூறுவதற்கான தார்மீக அடிப்படையைக்கூட நாம் இழந்துள்ளோம். எங்களுடைய குற்றஉணர்வானது எங்களது ஆன்மாவை முடமாக்கியுள்ளது. அது நமது ஆன்மாவை உள்ளிருந்தே அரிக்கிறது. ஒரு சிங்களவராக நான் பெற்ற அனுபவம் இதுதான்.

**தமிழர்-சிங்களர் உணர்வுத் தோழமை பற்றி என்ன கருதுகிறீர்கள்? தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தில் சிங்கள முற்போக்கு வாதிகளின் பங்கு எவ்வாறு அமைய முடியும்?**

மே 2009 இல் இடம்பெற்ற தமிழ் மக்களின் இன அழிப்பிற்குப்பின் நாம் ஒரு முக்கியமான வரலாற்றுக்கட்டத்தில் நிற்கிறோம். முற்போக்கு உணர்வுத் தோழமை போன்ற சொற்களை நாம் திரும்பிப் பார்த்துப் புதிதாக வரைவிலக்கணம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதுவரை காலமும் இந்தச் சொற்களுக்கு நாம் வழங்கி வந்த அர்த்தமும் வரைவிலக்கணமும் தமிழ்மக்களின் இன அழிப்பிற்குப்பின் மிகுந்த நெருக்கடியை எதிர்கொள்கின்றன; இந்த இனப்படுகொலை உலகத்தை உலுப்ப வேண்டிய பேரழிவு. இத்தகைய சூழலில் மௌனம் பேணுவது நடுநிலை என்று அர்த்தம் தராது. மௌனம் என்பது மறைமுகமான அங்கீகாரம். குறிப்பிடத்தக்க அளவு சிங்கள முற்போக்காளர்கள் படுகொலைகளுக்கு எதிராக இருந்தார்கள் என்பது உண்மைதான். எனினும், இன்னும் பலர் *அயனெஸ்கோவின்* காண்டாமிருகம் எனும் அபத்த நாடகத்தில் வருகின்ற காண்டாமிருகங்கள் போல் மாறிவிட்டனர். போர் தமிழ் மக்களுக்கு கொண்டுவந்த பேரழிவுகள் ஒரு புறம் என்றால், மறுபுறம் அது சிங்கள மக்களுக்கு என்ன செய்தது என்பதை நாங்கள் பார்க்க வேண்டி இருக்கிறது. முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களுக்குச் செல்பவர் எவருக்கும் போர் ஏற்படுத்திய அழிவுகளை நேரடியாகப் பார்க்கக்கூடியதாக இருக்கும். அந்த அழிவுகளின் பிரமாண்டம் உங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தும். தமிழ் மக்களின் ஒன்றிணைந்த தேசிய வாழ்வு போருக்குப் பின்னர் கூட எப்படிச் சிதைக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் பார்க்க முடியும். ஆனால், போர் சிங்கள மக்களிடம் ஏற்படுத்தியிருக்கின்ற அறம் அல்லது தார்மீகச் சீரழிவை நீங்கள் கண்ணால் பார்க்க முடியாது.

தமிழ் மக்களுக்கு எதிராக எத்தகைய குற்றத்தையுமே புரியவில்லை என்று அவர்கள் சொல்வதை எடுத்துக்கொள்ளுங்கள். எங்கள் மனதில்- சிங்கள மக்களின் மனதில்- உண்மையாகவே தமிழ் மக்களுக்கு நடந்த, கற்பனைக்கும் எட்டாத பயங்கரங்கள் நன்றாகத் தெரியும். அது எப்படி என்று கேட்கிறீர்களா?

இருபது ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை அரச படையினரின் மோசமான மூர்க்கத்தனத்தை நாம் பார்க்க நேர்ந்தது. 1987-1990 காலகட்டத்தில் ஏறத்தாழ 60 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களுடைய உடல்கள் ஆற்றில் வீசப்பட்டன. ரயர் போட்டு எரிக்கப்பட்டன. எங்களுக்கெனவும் மனிதப்புதைகுழிகள், கடத்தல்கள், காணாமற்போதல்கள், பாலியல் பலாத்காரங்கள், அன்னையர் முன்னணி போன்ற அமைப்புகள் என எல்லாமே இருந்தன. நினைவுச் சின்னங்களும் மரித்தோருக்காக எழுப்பப்பட்டன. எனவே இலங்கை அரசு என்னவெல்லாம் செய்யும் என்பது சிங்கள மக்களுக்கு தெரியாதது அல்ல. எங்களுக்கு இத்தகைய அநியாயங்கள் நடக்கும்போது அவற்றுக்குப் பொறுப்பாக இருந்தது இலங்கை அரசு என்று சொல்ல நாங்கள் தயங்கியது இல்லை. ஆனால், இப்போது இவ்வளவு அநியாயங்களும் தமிழர்களுக்கு நிகழ்கிறபோது இலங்கை அரசு இப்படியெல்லாம் செய்யாது என்று சிங்கள மக்கள் சொல்கிறார்கள்! ஒடுக்கப்படுகின்ற சிங்கள மக்களைக்கூட இத்தகைய கருத்து நெருக்கமாக இந்தக் கொலைகார அரசிடம் இணைத்து விடுகிறது.

எங்களுடைய அரசியல், அறவியல், அடிமைத்தளைகள் இவைதான்.

இந்தத் தளைகளை வேறு எவரும் அகற்ற முடியாது. ஏனெனில் இவை தாமாகவே மாட்டிக்கொண்ட தளைகள். இந்த நச்சுத் தளைகளை உடைப்பதில்தான் எங்களது- சிங்கள மக்களது-தார்மீக, அரசியல் விடுதலை தங்கியுள்ளது. உணர்வுத் தோழமை, முற்போக்கு என்பதன் அர்த்தத்தைப்பற்றி மீளச்சிந்திப்பதற்கு இது ஒரு முன் நிபந்தனையாகும்.

எவ்வாறு இந்தத் தளையை உடைப்பது? என்று நீங்கள் கேட்கலாம் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு.

எங்களுடைய நேரடியானதும் மறைமுகமானதுமான இரண்டு தளங்களிலும் எங்களுடைய ஒப்புதலோடுதான் தமிழ்மக்களின் இனப்படுகொலை எங்கள் கண்முன்னால் நிகழ்த்தப்பட்டது என்பதற்கான பொறுப்பை நாங்கள் ஏற்றுக்

**பொங்குதமிழ்**

கொள்ள வேண்டும். அத்தகைய ஒப்புதல் மூலம் மட்டும்தான் இன அழிப்பை நிகழ்த்திய இலங்கை அரசிடமிருந்து நாங்கள் விலகிக் கொள்ள முடியும். இலங்கை அரசிடமிருந்துமட்டுமல்ல. இனப்படுகொலைக்குத் துணைபோன உலக வல்லரசுகளிடமிருந்தும் நாங்கள் விலகிக்கொள்ள முடியும். இன அழிப்பை மூடி மறைக்க இவர்கள் எல்லோருமே முனைகிறார்கள்.

சிங்கள மக்களின் கூட்டு அடையாளம் என்பது தமிழ் மக்களின் இனப்படுகொலையை நிராகரிப்பதிலும் அந்த நிராகரிப்பை நியாயப்படுத்துவதிலுமே தங்கியிருக்கிறது. எனவே இனப்படுகொலை தொடர்பான எங்கள் பொறுப்பை ஒப்புக்கொள்வதன் மூலம் புதிய, தீவிரமான அரசியல் வழிமுறை ஒன்றை நாங்கள் தொடங்கலாம். இப்படி நாங்கள் செய்வது, தோற்றுப்போய் விட்ட தமிழர்களுக்கு நாங்கள் வெளிப்படுத்துகின்ற பெருந்தன்மையல்ல.

மாறாக எங்களது வெட்கம் மிக்க தர்மீக அடிமைத்தளையிலிருந்து எம்மை விடுவிப்பதற்கான துயர வாழ்வு இது. ஒடுக்கப்படுகின்ற தமிழ் மக்களுடன் அர்த்தம் பொதிந்த ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு இதுவே வழியமைக்கும். சிங்கள தமிழ் உணர்வுத் தோழமைக்கான முதற்படி, இங்கிருந்துதான் ஆரம்பமாக வேண்டும்.

(முற்றும்)

# அவலம் நிறைந்த முள்ளிவாய்க்கால் நிகழ்விலிருந்து மீண்டெழுந்து அரசியலுரிமையை வென்றெடுப்போம்

## முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்கு இன்றுடன் வயது மூன்று

சர்வதேச சமூகமும் மனித உரிமை பேசும் அமைப்புக்களும் மௌனித்துப் பார்த்திருக்க இலங்கை அரசு நடத்திய முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் வடுக்களுடன் மூன்று ஆண்டுகளை கடந்து நிற்கின்றோம். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை முன்னிறுத்திய நகர்வுகள், சர்வதேச தளத்தில் பிரிதொரு பரிமாணத்தில் ஈழப்போராட்டத்தை கொண்டு சென்று விட்டுள்ளன.

சிங்கள தேசத்தின் மீது பலம் அல்லது அழுத்தம் பிரயோகிக்காத விடத்து ஈழத் தமிழர்களின் உரிமையை கேட்க முடியாது என்ற நிலையில் சனல் 4 தொலைக்காட்சி உட்பட பலரது விடா முயற்சிகளின் பலனாக ஜெனீவா வில் இலங்கை அரசுக்கெதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது ஒரு வகையில் ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளை சர்வதேச அளவில் ஓரளவு நிலை பெறச் செய்வதற்கான தளத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாக வழங்கி இருக்கின்றது.

மறுவளமாக இன விடுதலைக்கான நகர்வுகள் என்ற அடிப்படையில் நோக்கும் போது முள்ளிவாய்க்காலின் பின்னரான சூழலை வெல்லுதலும் மீள் எழுதமும் 80 கடினமான காரியமாக இருப்பதாகவே உணரப்படுகின்றது. ஏனெனில் முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் தொடர்பிலும் தற்போது நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும், சர்வதேசத்தில் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அப்பால் கடந்த மூன்று வருடத்தில் ஈழத் தமிழினம் தன்னை முள்ளிவாய்க்கால் பின்னடைவில் இருந்தும் அதன் அழிவில் இருந்தும் மீள் ஒழுங்குபடுத்தி அரசியல், சமூக ரீதியாக விடுதலைப் போராட்டத்தை எந்தளவிற்கு முன்னகர்த்தியுள்ளது என்பது பாரிய அழிவை சந்தித்துள்ள இனத்தின் விடுதலையை நோக்கி தனித்துவமான நிகழ்ச்சி நிரலுக்குள் ஒருமுகப்பட்டு செயற்படுகின்றதா என்பதும் மூன்று வருடங்களைக் கடந்தும் தொடர்கின்ற கேள்விகளாகவே உள்ளன.

அதேவேளை, ஈழத் தமிழர்களை போரில் வெற்றி பெற்ற மனோபாங்கைக் கொண்டுள்ள சிங்களத்தின் பேரினவாத சிந்தனை இன்று அவர்கள் தேசிய வாழ்வில் சகல பரிமாணங்களிலும் வேரூன்றி வியாபித்து நிற்கின்றது. பண்பாடு, கல்வி, அரசியல், பொருளாதாரம் என அனைத்து வேர்களிலும் ஊடுருவி உள்ள இனவாதம், இலங்கைத் தீவில் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வை ஆட்டிப்படைக்கும் சக்தியாக மேலும் முனைப்புப் பெற்றுள்ளது.

சிங்களப் பேரினவாதத்தின் தற்போதைய பிரமாண்டமான வளர்ச்சியும் எழுச்சியும் அம் மக்களின் சமூக எண்ணவியக்கத்தில் அது புரியும் ஆதிக்கமும் எமக்கு ஒரு யதார்த்தபூர்வமான அரசியல் உண்மையை பறைசாற்றுகின்றது.




அதாவது பகை மற்றும் ஆதிக்க வெறியுடன் இலங்கை அரசு பூதாகரமாக வெளிப்பட்டு நிற்கையில் புலிகளின் ஆயுதப் போராட்ட பின்னடைவை அடுத்து ஈழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னகர்த்தும் விடயத்தை மிகவும் ஆழமாக உற்று நோக்கினால் அன்றி சுதந்திர விடுதலை சாத்தியமற்றது என்ற அப்பட்டமான உண்மையை நிராகரிக்க முடியாது.

முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு பின் ஈழ அரசியல் என்பது முள்ளி வாய்க்காலில் நடைபெற்ற இனப்படுகொலை போர்க் குற்றங்களின் அடிப்படை யில் இருந்து உருவாக்கம் பெறுகின்றது. இதன் ஊடாக எப்படிப்பட்ட தீர்வு கிடைக்கும். அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பது தெளிவில்லாத நிலையில் ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய விடுதலைப் போராட்டத்திற்கான ஒரு நம்பிக்கையை சர்வதேசத்தில் ஏற்படுத்தியிருக்கிறது.

இன்றைய சர்வதேச அரசியல் சூழலில் உரிமைப் போராட்டம் என்பது சர்வதேச நிகழ்ச்சி நிரலின் பின்னால் இயைந்து, இணைந்து முன்னகர்த்தி செல்லப்பட வேண்டும் என்பது அவசியமானதே. இருந்தாலும் சுயநலன்களின் அடிப்படையில் உருவாகும் உலக மேலாண்மை சக்திகளின் ஆதிக்க அரசியல் நோக்கத்திற்குள் ஈழத்தமிழர்களின் முள்ளிவாய்க்கால் மனித அவலம் அவசியப்பட்டது. இதன் வெளிப்பாடாகவே ஜெனீவா தீர்மானம் அமைகின்றது என்ற விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், வல்லாதிக்க சக்திகளில் நிகழ்ச்சி நிரலில் இலங்கை அரசை பயன்படுத்தி விடுதலைப் புலிகளை இல்லாதொழித்து விட்டு அங்கு தான் விரும்பும் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கு ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வை வழங்கும் திட்டம் இருந்தது என்ற கருத்துக்களும் இருந்தன. எனவேதான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மையப்படுத்தப்பட்ட போர் வெற்றியின் பிரதான பங்காளியான சரத் பொன் சேகாவை ஐ.தே.க. சார்பில் களமிறக்கியது. இது ஈழத் தமிழ் அரசியல் நிகழ்ச்சி நிரலில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

முள்ளிவாய்க்காலுக்குபின்னர் தீவிரம் பெற்ற இலங்கை அரசின் கொள்கைகளில் முதன்மை தந்திரோபாயங்களாக அமைவது ஈழத்தமிழினத்தின் இருப்பிற்கான அடிப்படைகளை இல்லாதொழித்து தன்னாட்சி கோட்டபாட்டிற்கான மூலக்காரணிகளை இல்லாது ஒழிப்பதற்கான செயற்பாடுகளை பல முனைகளில் பல வடிவங்களில் செய்து கொண்டு வருகின்றது. வடக்கு, கிழக்கை தொடர் இராணுவபிரசன்னத்திற்குள் வைத்துக் கொண்டு குடியேற்றம், மறைமுக இன அழிப்பு, இன விகிதாசார மாற்றத்தை ஏற்படுத்தல், போராட்ட சிந்தனையற்ற இளைஞர் சமூகத்தை உருவாக்கல், பொருளாதாரத்தில் தங்கு நிலையை ஏற்படுத்தல் என்ற இலக்குகளின் அடிப்படையில் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. இதன் மூலம் தமிழினம் இயல்பாக தனக்கான தனித்துவத்தை இழந்து போகும்.

அதேவேளை தாயகத்தில் அரசியல் பெரும்பான்மையை கொண்டுள்ள கூட்டமைப்பு ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பலவீனப்படுத்தாமல் காத்திரமாக தனது அரசியல் முன்னெடுப்புக்களை செய்யவில்லை என்ற பலத்த விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கின்றது.



முள்ளிவாய்க்கால் வரை புலிகளின் அரசியல் செல்வாக்கினுள் தனக்கான இருப்பை அமைத்துக் கொண்ட கூட்டமைப்பு கடந்த 3 வருடங்களாக பிராந்திய, சர்வதேச அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் பயணிப்பது மட்டுமல்ல தமிழ் மக்களின் அரசியல் அடிப்படைகளை கைவிட்டு விட்டது என்ற சந்தேகங்களும் கருத்துக்களும் உருவாகும் வகையில் தனது கருத்துக்களையும் முன்வைக்கின்றது.

தனித்துவமான அரசியல் தளத்தில் இயங்காத அதன் தலைமைத்துவம் சுய அடையாளத்தையும் சுயமரியாதையையும் இழந்து தனக்கான அரசியல் நகர்வை செய்யப்போகின்றதா? அல்லது ஈழத்தமிழர்களின் அடிப்படைகளில் இருந்து கொண்டு அங்கு செய்ய வேண்டிய அரசியல் அடைவுகளிற்காக பிராந்திய, சர்வதேச அரசியலை தனக்கு வாய்ப்பாக பயன்படுத்தப் போகின்றதா? அல்லது அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்குள் இயங்கும் ஒரு தரப்பாக செயற்படப் போகின்றதா? என்பது கவனத்துக்குரியதாகவுள்ளது.

எதிர்கால அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தில் சர்வதேசத்தின் பின்னால் ஓடுவது என்ற தீர்மானத்தில் மட்டும் தனித்து செயற்பட முடியுமா? இது புலம்பெயர் தேசத்தில் முன்னெடுக்க வேண்டிய பிரதான பணியாகும் என்பதை மறுப்பதற்கில்லை.

அதேவேளை சர்வதேச தலையீடு வரும்வரை நாம் நீண்ட காலப்போரினால் பாதிக்கப்பட்ட தாயகத்து சமூகத்தின் சமூக, அரசியல், பொருளாதார இருப்பை தக்கவைக்கும் முயற்சிகளை சர்வதேச தலையீடு வரும்வரை பொறுமை காப்போம் என்ற தீர்மானத்திற்குள் அப்படியே விட்டுவிட முடியுமா?

மூன்று வருடங்களை கடந்தும் ஒரு அரசியல் வெளியில் நிற்கதியற்று பயணிக்கும் ஒரு நிலையில் தமிழர்களை கையேந்தும் சமூகமாக உருவாக்க சிங்களவர் திட்டமிட்டு மேற்கொள்ளும் செயற்றிட்டங்களை எவ்வளவு காலம் மௌனித்து பார்க்க முடியும்.

ஏனெனில் இன்றும் பொருளாதார உதவிகள் இன்றி பசி, பட்டினி, தற்கொலை மற்றும் வாழ்வாதாரத்திற்காக பாலியல் தொழிலில் ஈடுபடுதல் என அவலங்களின் மத்தியில் எமது இனம் தவித்துக் கொண்டிருக்கிறது.

உயிர்வாழ்வதற்காக எதையும் இழக்க தயாரான ஒரு சமூகமாக எமது சமூகம் மாற்றங்கண்டு வருவதாக சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு பல வகைகளில் நெருக்கடிக்குள் வாழ்கின்ற எமது சமூகத்தை எப்படி கட்டமைக்கப் போகின்றோம்.

மூன்று ஆண்டுகளை கடந்தும் தொடரும் கேள்விகளுக்கு உறுதியான பதில் கிடைக்கப்பெற்றால் மட்டுமே ஈழத்தமிழினத்தின் இருப்பு இலங்கைத்தீவில் உறுதிப்படுத்தப்படும். இத்தனை வருடங்களாக ஈழத் தமிழினம் சுமக்கும் அவலங்களுக்கு ஒரு விடிவு வேண்டும்.

**நன்றி இணையம்**

அர்ப்பணிப்புக்களுக்கும் தியாகங்களுக்கும் அர்த்தம் வேண்டும். கோரிக்கைகளுக்கு நியாயம் வேண்டும். எமக்கான கடமையின் அவசியத்தையும் அவசரத்தையும் மீண்டும் ஒருமுறை சொல்லிசெல்கின்றது முள்ளிவாய்க் காலின் மூன்றாம் வருடம்.




# அம்புலி மாமா கதைகள்

## வீடு திரும்பினோம்



ஒரு வழியாக வீட்டிற்குப் பத்திரமாகத் திரும்பினேன். என்னைப் போல் ஒரு ஆமையாக இருந்தால்தான் என் துன்பங்கள் உங்களுக்குப் புரியும்! கடலில் ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர் தூரம் நீந்தி வந்தால் களைப்பாக இருக்காதா? அது மட்டுமல்ல! வரும் வழியில் நானும் என் நண்பர்களும் எத்தனை ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது தெரியுமா?

பெரிய மீன்பிடிக்கும் கப்பல்கள் விரித்திருக்கும் வலையில் சிக்காமல் வருவதே பெரிய விடயம்! தவிர, வரும் வழியில் பெரிய பெரிய திமிங்கிலங்களை வேறு எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் அவை பொதுவாக எங்களை உண்ண முயற்சிப்பதில்லை.


வீடு என்று நான் சொல்வது இந்த அழகான கடற்கரையிலுள்ள என் வீட்டைத்தான்! இந்த வீட்டைவிட்டு வெளியேறி 25 தொடக்கம் 30 ஆண்டுகள் ஆகியிருக்கும். என்னுடன் பத்து அல்லது பன்னிரெண்டு சகோதரர்களும், சகோதரிகளும் பிறந்தனர்.

நானும் என் உடன் பிறந்தவர்களும் ஒருநாள் எங்கள் வீட்டை விட்டு வெளியேறினோம். எங்கள் வீடு எப்படி இருக்கும் தெரியுமா? கடற்கரை மணலில் ஆழமாகத் தோண்டப்பட்ட குழிதான் என் வீடு! இந்தக் குழியைத் தோண்டியது என் தாய்! அதில் தன்னுடைய முட்டைகளைப் போட்டு விட்டுக் குழியை மூடிவிட்டாள்.

நான் பிறந்தது முதல் என் தாயைப் பார்த்ததேயில்லை. எனக்கு அத்தை ஒருத்தி இருக்கிறாள். அவள்தான் எனக்கு எல்லா விடயமும் சொன்னாள்.

தாய்மார்கள் முட்டைகளைக் குழி தோண்டி உள்ளே வைத்து விட்டு மீண்டும் கடலுக்குள் சென்று விடுவார்களாம்!

என் அத்தை எனக்கு வாயிலே நுழையாத உல்ரிட் என்ற பெயரைச்சூட்டினாள். என் அத்தை



எனக்குக் கூறியுள்ள பல விடயங்களை என்னால் இன்னும் நம்ப முடியவில்லை.

நான் பிறந்த போது மிக மிகக் குட்டியாக இருந்தேனாம்! ஆனால் இப்போது என்னைப் பார்த்தால் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. மூன்றடி அளவு வளர்ந்த என்னுடைய எடை இப்போது 60 கிலோ.

எங்களைக் காப்பாற்ற முனைந்த சில நல்ல மனிதர்களைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் பிறந்தது கோவா கடற்கரையில் என்று என் அத்தை சொன்னாள்.

நான் பிறப்பதற்கு முன் பல தீயவர்கள் எங்களைப் பிடித்துக் கொன்று இறைச்சியையும் முட்டையையும் விற்பனை செய்து வந்தார்கள். (எங்களைத் உண்டால் நன்றாகவா இருக்கும்?) ஆனால் நான் முன்னமே சொன்னது போல் மனிதர்களில் சில நல்லவர்களும் இருக்கிறார்கள்.

அவர்கள் கடற்கரை மணலில் முட்டைகள் உள்ள இடங்களைத் தேடியலைந்து கண்டுபிடித்து, அவற்றை ஜாக்கிரதையாக வெளியில் எடுத்துக் கொண்டு போய் தங்கள் வீட்டருகே மணலில் புதைத்துப் பாதுகாத்து வைத்துக் கொண்டனர்.

முட்டைகள் இருக்குமிடத்தைச் சுற்றி வேலியும் போடப்பட்டது. அப்படிப் பாதுகாத்த முட்டைகள் ஒன்றில்தான் நானும் இருந்தேன்.

அவ்வாறு அவர்கள் என்னைப் பத்திரப்படுத்தவில்லையெனில், இந்நேரம் ஏதாவது ஒரு உணவு விடுதியில் என் கதை முடிந்திருக் கும்.

பல ஆண்டுகள் கழித்து நான் இப்போது என் பிறந்த இடத்திற்கு வந்திருக்கிறேன். பிறந்து கடலில் இறங்கியது முதல் இந்நேரம் வரை எனக்குக் கடற் பயணம்தான்!

இங்கு வந்து பார்த்தால் எனக்கு முன்னமே பலர் இங்கு வந்திருந்தனர். அவர்கள் என்னை வரவேற்று எனக்குப் பெரு மகிழ்ச்சி ஊட்டும் செய்தியைக் கூறினர்.

கோவா கடற்கரை முழுவதும் எங்களைப் போன்ற ஆலிவ் ரிட்லி ஆமைகளுக்கான பாதுகாப்பான இடமாக அரசாங்கம் அறிவித்து இருக்கிறது என்ற செய்திதான் அது! அதாவது இனிமேல் அந்தக் கடற்கரையில் யாராவது எங்களுக்குத் தீங்கிழைத்தால் அவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள். குற்றம் நடக்காமல் தடுக்க காவலும் போடப்பட்டிருக்கிறது.

அந்த செய்தியைக் கேட்டு நான் மகிழ்ச்சியுற்றாலும், பயணத்தின் போது நடந்த ஒரு துயர நிகழ்ச்சி அடிக்கடி என் மனக் கண்முன் தோன்றி என்னை வாட்டியது.

பயணத்தில் என்னுடன் வந்த என் தோழி உல்வியா பாதி வழியில் ஒரு மீன் பிடிக்கும் படகு விரித்த வலையில் சிக்கிக் கொண்டாள்.


நாங்கள் அனைவரும் என்ன செய்வதென்று தெரியாமல் பதறினோம்! எங்களால் அவளை வலையில் இருந்து மீட்க முடியவில்லை.

அவள் பரிதாபமாக எங்கள் கண் முன்னே இறந்து போனாள். இறக்கும் முன் அவள் எங்களைப் பார்த்த பார்வை என் நெஞ்சில் இன்னும் ஈட்டியால் குத்துகிறது.

என்னால் முடியவில்லை! நீங்களாவது நலமாக இருங்கள்! என்று எங்களுக்கு அவளுடைய கண்கள் மௌனமான மொழியில் கூறின.

நாங்கள் வந்த வேலையை இங்கு முடிக்க வேண்டும்! என்னுடைய வயிறு மிகவும் கனமாக இருக்கிறது.

நான் கடற்கரையில் ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து குழி தோண்ட வேண்டும்.



எதற்கென்று தெரியவில்லையா? நான் இடப் போகும் முட்டைகளைப் பத்தி ரமாக வைப்பதற்குத்தான்!

ஏற்கனவே இங்குள்ள நல்ல மனிதர்களுடன் சேர்ந்து நீங்களும் என் முட்டைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!

# நியமிக்கப்படவுள்ள புதிய நிபுணர்குழு தொடர்பில் நீதிமன்றுக்கு விளக்க முடிவு

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

**பல்கலைக்கழகத்திற்கு இணைத்துக் கொள்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இசற் முறை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நியமிக்கப்படவுள்ள புதிய நிபுணர்குழு தொடர்பில் உயர்நீதிமன்றத்தை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிடுகின்றார்.**

அதற்கான நகர்த்தல் பத்திரம் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் புதிய நிபுணர்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நிபுணர்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ளதாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

நிபுணர்குழு நியமிக்கப்படாது அது தொடர்பில் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பிற்கு அமைய நடவடிக்கை எடுப்பது அவசியமானதென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கின்றார்.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பரீட்சார்த்திகளின் மீள்திருத்தத்திற்கு விண்ணப்பித்ததன் ஊடாக பெறுபேறுகளில் திருப்தியற்ற தன்மை இருப்பதை காணக்கூடியதாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நாளை மறுதினத்திற்கு முன்னர் தீர்ப்பு வெளியிடப்படவுள்ள நிலையில் தற்போது புதிய நிபுணர்குழுவை நியமிப்பது தொடர்பில் கருத்து வெளியிடப்படவுள்ளதாக ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் கூறினார்.

எனவே, பொய்யான குழுவை நியமிக்காது நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய முறை தொடர்பில் நிபுணர்கள், சட்ட வல்லுநர்கள் உள்ளிட்ட தரப்பினர் வெளியிட்ட கருத்துக்கள் மற்றும் யோசனைகளை ஆராய்வதே இந்தக் குழுவை நியமிப்பதன் நோக்கமென உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## சதுரங்கபோட்டி முடிவு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட சதுரங்க போட்டியில் 19 வயது பிரிவு ஆண், பெண்களுக்கான இரு போட்டிகளிலும் வவுனியா வடக்கு கல்வி வல யத்தை சேர்ந்த சுந்தரபுரம்அரசினர் தமிழக் கலவன் பாடசாலை அணிகள் சம்பியனாகியுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,


**பெண்கள் பிரிவு**

சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி

**ஆண்கள் பிரிவு**

சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், குளவிசுட்டான் அ.த.க. பாடசாலை.

(அ-2-266)



யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் அமரர் எஸ்.எஸ்.நவரட்ணம் நினைவாக யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் லயன்ஸ் எஸ்.மகாதேவா மாணவிக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## தமிழின் அழிதலுக்கு நீதிகேட்டு அணிதிரள சீமான் அழைப்பு

இலங்கையில் பூர்வீகக் குடிகளான தமிழினச் சொந்தங்களின் விடுதலைப்போராட்டத்தை அழிக்க தெற்காசிய வல்லாதிக்கங்களின் துணையுடன் சிங்கள பௌத்த இனவெறி அரசு நடத்தி முடித்த இனப்படுகொலைப் போர் முடிக்கப்பட்ட நாள் மே 18 ஆகும்.

மூன்று ஆண்டுகள் ஓடிவிட்ட நிலையில் தமிழினத்தின் மீது தொடுக்கப்பட்ட நியாயமற்ற அந்த போரில் படுகொலை செய்யப்பட்ட ஒன்றேமுக்கால் இலட்சம் மக்களின் உறவுகளுக்கு இதுவரை நியாயம் கிட்டவில்லை. அங்கு நடந்தது திட்டமிட்ட தமிழினப் படுகொலைதான் என்பதை நிரூபிக்கும் சான்றுகளும் புகைப்படங்கள், அருகில் இருந்து பதிவு செய்யப்பட்ட காண்பொலிக்காட்சிகள், செயற்கைக்கோள் புகைப்படங்கள் என்று பலவும் சனல்-4 உள்ளிட்ட பல ஊடகங்களில் வெளிவந்தும் இன்று வரை உலகில் ஒரு நாடு கூட அது இனப்படுகொலைதான் என்று கூறவில்லை.

எல்லோரும் போர்க்குற்றம் நடந்துள்ளது, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் நடந்துள்ளது என்றுதான் கூறுகின்றனரே தவிர ஐ.நா.வின் இன அழித்தல் குற்றமும் தண்டனையும் என்கிற பிரகடனத்தின்படி அங்கு இன அழித்தல் நடந்துள்ளது என்று கூறவில்லை. அதனை நிரூபிக்க சுதந்திரமான பன்னாட்டு விசாரணையை நடத்துவதற்கு ஐ.நா.வும் எந்த முன்னெடுப்பையும் செய்யவில்லை.

தமிழினப் படுகொலை நடந்து முடிந்த மூன்றாவது ஆண்டு நினைவு நாளான மே 18 ஆம் நாளன்று தமிழினப் படுகொலைக்கு நியாயம் கோரி கோவையில் நாம் தமிழர் கட்சி மாபெரும் பேரணியையும் பொதுக் கூட்டத்தையும் நடத்துகிறது.

தமிழினத்தின் விடுதலை, உரிமை மீட்பு ஆகியவற்றை முன்னெடுக்க உருவான தமிழரின் அரசியல் கட்சியான நாம் தமிழர் கட்சி மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. (அ-2)

## மாணவர்களுக்கான போசாக்கு உணவுடன் தினமும் ஒரு முட்டை

### அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள கிராமியப் பாடசாலைகளின் மாணவ, மாணவிகளின் போசாக்கை அதிகரிப்பதற்காக அரசாங்கம் ஏற்கனவே வழங்கிவரும் பிள்ளைகளுக்கான பகல் போசனத்துக்கு மேலதிகமாக நாளொன்றுக்கு ஒரு முட்டையை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் கோழிப்பண்ணையாளர்களின் முட்டை உற்பத்திக்கு நல்ல விலையை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் முதல் மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பயிலும் பிள்ளைகளுக்கு பகல் உணவுடன் முட்டையும் கொடுக்கப்படுவதாக கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அடுத்த வாரம் முதல் கோழிப்பண்ணையாளர்களின் முட்டைகளுக்கு கூடுதலான விலையை பெற்றுக் கொடுப்பதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுக்கப்போவதாக கூறியுள்ளார்.

முட்டை உற்பத்தி அதிகரித்த காரணத்தினால் முட்டை விலை வீழ்ச்சியடைந்திருக்கும் வேளையில் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய முட்டைகளுக்கு கூடுதலான விலையை பெற்றுக் கொடுப்பதற்கான இவ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பகல் உணவுடன் முட்டையும் கொடுக்றும் செயற்றிட்டம் காலப்போக்கில் நாடெங்கிலும் விஸ்தரிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தினந்தோறும் 35 இலட்சம் முட்டைகள் தேவைப்படுவதால் 25 இலட்சம் முட்டைகள் வடமேல்மாகாண முட்டை உற்பத்தியாளர் களிடமிருந்து பெறப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை

### ஜே.வி.பி. திட்டவட்டம்

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பினை தொடர்ந்து ஜே.வி.பி. இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

தமிழ் மக்களின் மெய்யான பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானது என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

எனினும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறிமுறைமையை உருவாக்க முடியாது.

அரசாங்கத்தின் பாராளுமன்ற தெரிவுக்குழு யோசனைத் திட்டத்தில் எமக்கு நம்பிக்கை கிடையாது.

நேரத்தை வீண்விரயமாக்கும் நோக்கில் அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக்குழு யோசனைத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான ஓர் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை இந்த அரசாங்கத்தினால் முன்வைக்க முடியும் என்பதில் நம்பிக்கை கிடையாது.

மக்களின் உரிமைகள் உரிய விதத்தில் வழங்கப்பட்டிருந்தால் சர்வதேச சமூகம் தலையீடு செய்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## நூலக வலுவூட்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் நூலக வலுவூட்டல் நிகழ்வு-16 இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு கோண்டாவில் பொது நூலக மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகர் எஸ்.கேதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-7)

# வடக்கு, கிழக்கு, மலையகம் சார்ந்த சைவ அமைப்புக்களின் ஒருங்கிணைப்பு கூட்டம்

## தீர்மானங்கள் நிறைவேற்றம்

(பூந்தோட்டம்)

கீரிமலை நகுலேஸ்வர ஆலய சுற்றாடலில் உள்ள சிவபூமி மடத்தில் அண்மையில் வடக்கு, கிழக்கு, மலையகம் சார்ந்த சைவ அமைப்புகள் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போது இவ்வமைப்பினால் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அவை வருமாறு,

இந்து மக்களுடைய சமய, சமூக தேவைப்பாடுகளை முழுமையான வகையில் நிறைவு செய்யும் பொருட்டு வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பிரதேசங்களை மையப்படுத்தி இந்து மகாசபை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். இச்சபையானது அவ்வப் பிரதேச தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் செயற்பாடுகளை நிறைவேற்றும் இயல்பு கொண்டதாக அமைய வேண்டும்.

இதன்போது இம் மகாசபையின் யாப்பு விதிகளை உருவாக்குவதற்கும் ஏனைய ஆலய தர்மகர்த்தா பரிபாலன சபைகள், சிவாச்சாரியார் அமைப்புக்கள், ஆலய தொண்டர் சபைகள், சைவ நற்பணி மன்றங்கள், இந்து வாலிபர் அமைப்புக்கள், சைவ மங்கையர் கழகங்கள், சைவ சிறுவர் இல்லங்கள், இந்து அறக்கட்டளைகள், அறநெறிப் பாடசாலைச் சமூகங்கள், இந்துக் கல்லூரிகள் சார்ந்த பாடசாலை சமூகங்கள் ஆகிய இந்து சமயம் சார்ந்த அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளீர்ப்பு செய்வதன் மூலம் இந்து சமய பாரம்பரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை குழுவொன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவில் ஒவ்வொரு பிரதேசங்களையும் சார்ந்த பல்துறைசார் அமைப்புகளின் பிரதிநிதிகளே அங்கத்தவர்களாகவுள்ளனர்.

இதன் உருவாக்கப்பணிகளின் இணைப்பு நிலையமாக வவுனியா-சிவன் முதியோர் இல்லம் இயங்கவுள்ளது.

மற்றும் ஆலயங்களில் நடைபெறும் உயிர்ப் பலிகளை நிறுத்துவதற்கு அந்தந்த பிரதேச மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும்.

அத்துடன் இச் செயற்பாட்டினை இந்து இளைஞர் அமைப்புகள், அவ்வப்பிரதேச பொதுமக்களினையும் உள்வாங்கி பிரசார செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இம் மகா சபையின் நடவடிக்கை குழுவில் இடம்பெறுபவர்களின் பெயர் விபரம் வருமாறு,

ஆறு. திருமுருகன் (தலைவர், துர்க்கா தேவஸ்தானம்), சீ.யோகேஸ்வரன் (தலைவர், கிழக்கு இந்து அமைப்புக்களின் ஒன்றியம்), பிரம்மஸ்ரீ க.பாலமுருகன்- (சிவாச்சாரியார், நீர்வேலி கந்தசாமி கோயில்), ஆ.நவரத்தினராஜா (தர்மகர்த்தா, வவுனியா அகிலாண்டேஸ்வரர் ஆலயம்), க.தாமோதரம்பிள்ளை (தர்மகர்த்தா, விடத்தல் தீவு கற்பகப் பிள்ளையார் ஆலயம், மன்னார்), வைத்தியர் இ.சிவசங்கர் (ஆலோசகர், சிவத்தமிழ் மானிட விடியற் கழகம்), இ.கலியுகவரதன் (தலைவர், சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம், திருகோணமலை), வெ.அருணன் (சித்தி விநாயகர் ஆலயம், புசல்லாவ), இ.கிருபாமூர்த்தி (தர்மகர்த்தா, குருமண்காடு காளி கோயில்), சீ.சுந்தர் (பரிபாலனசபை, ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், மட்டக்களப்பு), சோ.பத்மநாதன் (தலைவர், சைவ வித்தியாவிருத்திச் சங்கம்), பொ.மாணிக்கவாசகர் (பணிப்பாளர், சிவனருள் இல்லம், திருக்கேதீஸ்வரம்), பேராசிரியர் க.சிற்றம்பலம் (தலைவர்- இந்து சமயப் பேரவை), வைத்தியர் ச.பகீரதன் (ஆலோசகர், சிவத்தமிழ் மானிட விடியற் கழகம்), சி.பரமேஸ்வரி (சைவ மங்கையர் கழகம், கிளிநொச்சி), இ.நாகேந்திரராஜா (செயலாளர், அகில இலங்கை சைவன் நற்பணி மன்றம்), சி.சோதிமூர்த்தி (தலைவர், சிவானந்த மகரிசி யோக நிலையம்), வைத்தியர் ப.நந்தகுமார் (ஆலோசகர், சிவத்தமிழ் மானிட விடியற் கழகம்), சி.குணபாலன் (சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம்), தா.நிகேதன் (இந்து சமய ஆசிரிய ஆலோசகர், கிளிநொச்சி), க.பெரியதம்பி (இந்து வாலிபர் சங்கம், வட்டுக்கோட்டை) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

(அ-7-266)

# தேங்காய் ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட தேங்காய்கள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

எனவே, இவ் ஏலத்தில் பங்குபற்ற விரும்புவோர் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-3-267)

# தலைமைத்துவ பயிற்சி எந்தவித நன்மையையும் ஏற்படுத்தாது

## பல்கலை. மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டு

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் தலைமைத்துவ பயிற்சியின் மூலம் எந்தவிதமான நன்மையும் ஏற்படாது என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் பொதுமக்களின் பணம் விரயமாகுமே தவிர நன்மைகள் எதுவும் கிடையாது என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்காக செலவிடப்படும் பணத்தை கொண்டு பல்கலைக்கழகங்களின் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க முடியும்.

தலைமைத்துவ பயிற்சி என்ற போர்வையில் வழங்கப்படும் இராணுவ பயிற்சியினால் நாட்டின் உயர்கல்வி முறைமையில் பாதக விளைவுகள் ஏற்படும்.

தலைமைத்துவ பயிற்சிகளை வழங்குவதற்காக கடந்த ஆண்டில் ஒரு மாதத்தில் அரசாங்கம் 600 மில்லியன் ரூபாவினை செலவிட்டு வருகிறது.

இம்முறை இந்தப் பயிற்சி ஒன்றரை மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இம்முறை செல வுகள் இன்னமும் அதிகரிக்கக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# வெளிவிவகார கொள்கைகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்

## கே.டி.லால்காந்த எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கை மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும் என ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கைகளில் தெளிவற்ற நிலைமை காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அணிசேரா கொள்கைகளிலிருந்து காலணித்துவ கொள்கைகளுக்கு அரசாங்கம் மாறியுள்ளதாக தெரிவித்துள்ளார். சர்வதேச சமூகத்துடன் வெளிவிவகார அமைச்சே முக்கியமான தொடர்புகளை பேணி வருகிறது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பாதுகாப்பு அமைச்சு வகித்தளவு பொறுப்பை தற்போது வெளிவிவகார அமைச்சு வகிக்க வேண்டும்.

ஜெனீவா தீர்மானத்தின் பின்னர் சில தூதுவராலயங்களின் பணிகளை குறைத்தும் புதிய தூதுவராலயங்களை அமைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வெளியுறவு கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தியிருந்தால் அது தொடர்பில் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# புதிய குடும்பத்திட்ட தடுப்பூசியை அறிமுகப்படுத்த தீர்மானம்


புதிய குடும்பத்திட்ட தடுப்பூசியை அறிமுகப்படுத்துவதற்கு குடும்ப சுகாதார பிரிவு தீர்மானித்துள்ளது.

நாட்டில் டிப்ரோ போவேறா என்ற தடுப்பூசியை பயன்படுத்துவது அண்மையில் தடை செய்யப்பட்டதாக பிரிவின் பணிப்பாளர், விசேட நிபுணர் வைத்தியர் தீப்தி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

குறித்த தடுப்பூசியில் காணப்பட்ட பிரச்சினைகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் கூறினார். அதற்கு பதிலாக பெல்ஜியத்தில் இருந்து புதிய வகை தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதிய வகை தடுப்பூசி தற்போது நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் அடுத்த மாதம் முதல் அவை குடும்ப சுகாதார பிரிவுகளுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)





யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் எனது உலகு சிறுவர் புகைப்படக்கண்காட்சி நேற்று முன்தினம் பயிற்சி மையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உள்ளிட்ட விருந்தினர்கள் கண்காட்சிகளை பார்வையிடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- ஜெ.ஜெகன்)

# கமக்கார அமைப்புக்களின் தேர்தல் இடை நிறுத்தம்

(பூநகரி)

பூநகரி கமநலச் சேவை நிலையப் பிரிவில் நடைபெற இருந்த கமக்கார அமைப்புக்களின் தேர்தல்கள் கமநல சேவை உதவி ஆணையாளரின் அறிவித்தலின் படி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பூநகரிப் பகுதியில் உள்ள 19 கமக்கார அமைப்புக்களின் தேர்தல்கள் நடைபெறுவதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டு இரண்டு கமக்கார அமைப்புக்களுக்கான தேர்தல் நடைபெற்றிருந்த நிலையில் அவ் அறிவிப்பு விடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு பின்னர் தேர்தல் நடைபெறுவது சம்பந்தமாக அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி 31 ஆம் திகதியுடன் இவ் அமைப்புக்களின் பதிவிக்காலம் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-84)

பிரார்த்தித்தால் கேட்டதைப் பெறுவோம் அல்லது கேட்டிருக்க வேண்டியதை பெறுவோம்.

-லைட்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எங்கள் உறவுகளுக்காக உள்ளத்தால் பிரார்த்திப்போம்

2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி உலகத் தமிழ் மக்களால் மறக்க முடியாத நாள்.

வன்னிப்போரில் இலங்கை அரசு வெற்றி கொண்ட நாள் என்பதற்காக அது மறக்க முடியாத நாள் என்று யாரும் பொருள்கொள்ள வேண்டாம்.

எங்கள் உறவுகள் துடிதுடித்து பழியாகிப் போன நாள். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் புதையுண்டு போன நாள். தமிழ் அரசியல் தலைமைகளின் கபடத்தனங்கள் மீள கருக்கட்டிய நாள். புலிக்குத் தலையையும் அரசுக்கு வாலையும் காட்டிய விலாங்குகள் உயிர் மீண்டநாள் என்று இந்த நாளை பலவாறாகக் கூறலாம்.

விடுதலைப் புலிகளின் போராட்டம் அவர்களின் அணுகுமுறை என்பனபற்றிய விமர்சனங்களுக்கு அப்பால், இலங்கை அரசுகள் எங்களுக்கு எதுவும் தரத்தயார் இல்லையென்ற ஆழமான நினைப்புகளே! விடுதலைப் போராட்டம் இந்தளவு தூரம் எழுச்சி பெறுவதற்குக் காரணம் என்பதை எவரும் மறந்துவிடலாகாது.

எனினும் எங்கள் உரிமைப் போரை ஒடுக்குவதில் உலக நாடுகளுக்கு பலமான பங்கு உண்டு என்பதையும் நாம். மறந்துவிடலாகாது.

சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு உதவி செய்யாதிருந்தால் வன்னிப் போர் என்ற பேச்சுக்கே இடம் இருந்திருக்காது.

எனினும் துரதிர்ஷ்டவசமாக விடுதலைப்புலிகள் இராணுவ நடவடிக்கைப்பற்றி முழுமையாக சிந்தித்தனரே அன்றி அவர்கள் அரசியல் ரீதியாக, இராஜதந்திர வியூகங்களை அமைப்பதில் இம்மியும் கரிசனை காட்டவில்லை.

விடுதலைப் புலிகள் ஒரு புறத்தில் இராணுவக் கட்டமைப்பையும் மறுபுறத்தில் அரசியல் கட்டமைப்பையும் வளர்த்திருப்பார்களாயின் இலங்கைத் தமிழ் மக்களின் இன்றைய நிலை வேறுவிதமாக அமைந்திருக்கும்.

நடந்து முடிந்தவற்றை திரும்பத்திரும்ப கூறுவதால் நடக்க வேண்டியவை தடைப்படுமே அன்றி வேறுஎந்தப்பயனும்ஏற்படப்போவதில்லை என்பதால் அதுபற்றி அதிகம் பேசுவதை விட்டுவிடலாம்.

பரசுராமர் இட்ட சாபம் குருஷேத்திர போர்க்களத்தில் கர்ணனின் உயிரைப் பறித்தது போல விடுதலைப்புலிகளும் தங்கள் இறுதிக்காலத்தில் கூடாத கூட்டங்களை தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டனர்.

அவ்வாறு சேர்த்தவர்கள் சேர்க்க வேண்டியவர்களை சேர்க்க மறுத்தனர். உண்மையில் தர்மலிங்கம் சித்தார்த்தன் போன்ற அரசியல் இலாபம் கருதாதவர்களை விடுதலைப்புலிகள் தங்களுடன் சேர்த்திருந்தால் படு மோசமான நிலைமைகளை சந்தித்திருக்க மாட்டார்கள்.

என்செய்வது? எல்லாம் நடந்து முடிந்து விட்டது. நம்மிடம் இருக்கக் கூடிய ஏராளமான துன்பங்களில் தங்கள் உயிரைக்காப்பாற்றுவதற்காக எத்தனையோ இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றும் உயிரைப்பாதுகாக்க முடியாமல் அபத்தமாகப் பலியாகிப்போன எங்கள் உடன்பிறப்புகள் குறித்த வேதனை தாளமுடியவில்லை.

இவர்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக நாம் எல்லோரும் இன்றைய நாளில் இறைவனை வணங்கி அஞ்சலிப்போம்.

# நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த போராடியவர்கள் முப்படைவீரர்கள்

## அஞ்சலி நிகழ்வில் ஆளுநர் புகழாரம்

இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தியதோடு, இறைமையையும் பாதுகாக்கப்போராடியவர்கள் முப்படைவீரர்கள் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் போரின்போது உயிரிழந்த முப்படை வீரர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று பலாலி கூட்டுப் படைத்தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 ஆண்டுகளாக இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தை முடிபுக்குக் கொண்டுவந்து நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் சுதந்திரத்தையும் ஏற்படுத்த முப்படை வீரர்களும் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர்.

அத்தோடு இந்த நாட்டின் இறையாண்மையையும் நிலைநாட்ட பாடுபட்டவர்கள் அவர்களை நினைவுகூரும் இந்த நிகழ்விற்கு வருகைதந்துள்ள அனைவரையும் வரவேற்கின்றேன்.

மேலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் இந்த நாட்டில் நிலை கொண்டிருந்த பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டு சுதந்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் முக்கிய பங்காற்றியவர்கள் முப்படைவீரர்கள்.

வடமாகாணத்தில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்பு பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதிலும் முப்படைவீரர்கள் பங்காற்றி வருகின்றனர்.

எதிர்காலத்திலும் இவ்வாறான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

அத்தோடு யுத்தத்தால் இடம் பெயர்ந்த வடமாகாணத்தைச் சேர்ந்த 3 இலட்சத்து 50ஆயிரம் பேருக்குமேல் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப் பட்டுள்ளனர். மக்களை மீள்குடியேற்றுவதிலும் முப்படையினரின் பங்கு அளப்பரியது.

எனவே மனிதாபிமான நடவடிக்கையின் போது உயிரிழந்த இந்த நாட்டில் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் பாதுகாக்கப் போராடியவர்களின் குடும்பத்தை முன்னேற்ற பிரார்த்தனை செய்கின்றேன்.

இந்தநிகழ்வில் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி, பண்பாடு, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், யாழ். இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், யாழ். பாதுகாப்பு படைத்தலைமையக கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, வன்னிமாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி பியந்த டி சில்வா, கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட பிரதேச செயலர்கள், வடமாகாணத்திலுள்ள திணைக்களப் பணிப்பாளர்கள், அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், முப்படைவீரர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# ஆசிரியர் இடமாற்றத்தால் மாணவர்களின் கல்வி ஸ்தம்பிதம்

(கரவெட்டி)

அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் ஒரே தடவையில் ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றமையால் தரம் 1,2,3 வகுப்பு மாணவர்களின் கல்விச் செயற்பாடு முற்றாக செயலிழந்துள்ளதாக பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பாடசாலையில் கடந்த 14ஆம் திகதி 5 கல்வியியற் கல்லூரிக்கும் ஒரு ஆசிரியர் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கும் இன்னொரு ஆசிரியர் வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரிக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றமையாலேயே ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

இப்பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 13 வரை 244 மாணவர்கள் கல்வி கற்று வருவதாகவும் அவர்களுக்கு 12 ஆசிரியர்கள்மட்டுமேகல்விகற்பிப்பதற்குஉள்ளனர்.

இதனால் தரம் ஒன்றில் இருந்து தரம் 3 இற்கு ஆசிரியர்கள் இன்மையால் இது தொடர்பாக வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இக்குறைபாட்டை நீக்கும் முகமாக வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் உடனடியாக மூன்று ஆசிரியர்களைநியமிப்பதற்குநடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார். (3-24)



# வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

மனம் ஒருப்பட்டு வழிபாடு செய்யும் போது எமக்கு முன்பே ஒரு திருவுருவம் தேவைப்படுகிறது. ஐம்புலன்களின் செயற்பாட்டை அடக்கி மனதை இறையுருவிலே பதிக்கும்போது மனம் வழிபாட்டில் ஒடுங்கி நிற்கிறது. ஆனால் எம்முன்னே உள்ள திருவுருவம் எம்முடைய ஐம்பொறிகளையும் ஈர்ப்பதாக இருக்கவேண்டும். கோவில்களிலே உள்ள கடவுளர்களின் உருவத் திருமேனிகளை நமது ஊனக்கண்களால் பார்க்கும்போது ஒரு பரவச நிலை ஏற்படுகிறது. கண்ணுக்கு அழகும் மூக்கிற்கு நுகர்வும் வாய்க்கு வார்த்தையும் செவிக்கு இசையும் உடலுக்குத் தொடுகையும் கிடைக்கும் இடம் கோவிலாகும்.

வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவுருவத்தோற்றம் எமது கண் பார்வையை ஒன்றவைக்கும். மலர்களிலிருந்து வெளிவீசும் நறுநாற்றம் எமது மூக்கின் செயற்பாட்டை முற்றாகக் கவர்ந்து நிற்கும்.வாய் எம்மை அறியாமலே வார்த்தைகளை வெளிவிடும். இறை நாமங்களைச் சொல்லத் தொடங்கும். செவியிலே கோவிலில் இசைக்கப்படும் இன்னிசைக் கருவிகளின் ஓசை வந்து நிறையும். உடல் உறுப்பான கை குவியும். இத்தகைய ஒரு வழிபாட்டு நிலையால் மனித மனம் செம்மையுறும். இதனை மணிவாசகர் தனது பாடல்களிலே பல முறை எடுத்தியம்பியுள்ளார்.

அவருடைய இறைவழிபாட்டு நிலையில் முதலில் ஐயனான சிவனின் தோற்றந்தான் தெரிகிறது. ஆனாலது வேறெந்த தெய்வத்திற்கும் இல்லாத சிறப்பான அர்த்தநாரீஸ்வர வடிவமாக உள்ளது. ஆண்பாதி பெண்பாதியாக அமைந்த அற்புத வடிவம். அந்தத் திருவடிவத்தை **கன்னி பங்க** என்று குறிப்பிடுகின்றார். உமையம்மையின் மை கலந்த குளிர்ந்த கண்கள் அவரை ஈர்க்கின் றன. குழந்தை தாயைப்பார்ப்பது போலப் பார்க்கிறார். தாயைக் கண்ட பின்னரே தந்தையைப் பார்க்கும் மனிதக் குழந்தையாகி நின்று பாடியுள்ளார். இறைவன் பற்றிய எண்ணத்தில் இடையீடு ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுகிறார். நான் மாயை வயப்பட்டு நிற்கின்றேன். அதனால் தன்னை **வஞ்சனேன்** என வர்ணிக்கிறார். பொய்யாகிய மாயையைச் சார்ந்து நிற்பதால் குற்றமிழைத்த நிலையில் இருப்பதாகக்கூறுகிறார். எனவே மாயையின் தொடர்பிலிருந்து நீ என்னை விடுவிக்கவேண்டும். எனக்கு உன்னைத்தவிரப் பற்றிக்கொள்ள எதுவும் இல்லை. நான் ஒரு பொய்யன் பனாகவே இன்னும் இருக்கிறேன். உன்னுடைய மெய்யடியார்கள் எல்லோரும் உன்னுடைய திருவருள் ஆகிய திருவடிக்கண் சார்ந்து மெய்யாகவே இரண்டறக்கலந்துவிட்ட அடியார்களாக உள்ளனர். பொய்யாகிய எனக்கும் மெய்யன்பு உண்டாக்கும்படி நீ அருள் செய்ய வேண்டும். உண்மையான அன்புடைய அடியவரை **கழற்கண்ணே மெய்கல ந்த** அன்பர் எனக் குறிப்பிட்டுள்ளார். மனம்,

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மொழி, மெய்யால் வழிபடும் நிலை யில் இறைவன் கழலடியை மட்டும் நினைந்து வழிபடும் வழிபாட்டு மரபைப் பாடலிலே பதிவு செய்துள்ளார்.

அவன் அருளால்தான் அவன்தாள் வணங்கும் பேற்றைப் பெறலாம். இறைவன் அடியவர்க்கு அருள் செய்யும் போது இறைவியுடன் இணைந்த தோற்றத்துடன் வருவான். எனவே வழிபாடு செய்யும் போது அர்த்தநாரீஸ்வர வடிவத்தை வழிபடுவதே சிறப்பானதாகும்.

*ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர்*
*பற்று வஞ்சனேன்*
*பொய் கலந்த தல்ல தில்லை பொய்ம்*
*மையேனெ னெம்பிரான்*
*மைகலந்த கண்ணி பங்க வந்து நின்*
*கழற்கனே மெய் கலந்த அன்பரன்*
*பெனக்கு மாக வேண்டுமே*

# தெரிவுக்குழு தொடர்பாக அரசிடமிருந்து நேரடியான பதில் கிடைக்க வேண்டும்

## மாவை எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இடம்பெறச் செய்வதற்கு இலங்கை அரசு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வரும் நிலையில் தெரிவுக் குழுவுக்குச் செல்வது குறித்து பல மட்டங்களில் சிந்திக்க வேண்டியுள்ளது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் அங்கம் பெற வைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இடைத்தரகராகச் செயற்பட்டாலும் தமிழ்க் கூட்டமைப்பு அரசிடமிருந்து நேரடியானதொரு பதிலையே எதிர்பார்க்கின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை தெரிவுக் குழுவுக்குத் தமது பிரதிநிதிகளின் பெயர்களைப் பரிந்துரைப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் முடிவெடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தெரிவுக்குழு விவகாரம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அரசுக்குமிடையில் பேச்சுகள் இடம்பெற்று வந்தாலும் அரசின் பதில் என்ன என்பது எமக்குத் தெரியாது. ஐக்கிய தேசியக் கட்சி தற்போதுதான் பேச்சை ஆரம்பித்துள்ளது.

எனவே, எடுத்த எடுப்பில் எம்மால் இறுதிக் கட்டத்திற்குச் செல்ல முடியாது. பல மட்டங்களிலும் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நிபந்தனைகளுடன் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்பதற்குத் தாம் தயார் என அவர் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புலிகளின் சட்டத்தரணிக்கு புனர்வாழ்வளிக்க பணிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சட்டவரைஞராக இருந்த ஒருவரை கொழும்பு நீதிமன்றம் புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு நேற்று உத்தரவிட்டுள்ளது.

கே.பி.லங்காசேவாரன் என்ற இவர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சட்டவரைஞராக செய ற்பட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அத்துடன் அவர் தமிழீழ விடுதலைப் புலி களின் நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் சட்டத் தரணியாகவும் செயற்பட்டுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் இலங்கை சட்டக் கல்லூரியில் கல்வி கற்ற போது விடுதலைப் புலிகள் அமைக்கில் கட்டாயமாக இணைத்துக் கொள்ளப்பட்டதாக கொழும்பு நீதிமன்றத்தில் அரச சட்டவாதிகள் தெரிவித்தனர். (அ-2)

# சுகாதார மேம்பாடு குறித்த வினாடி வினா போட்டி முடிவு

(பூந்தோட்டம்)

யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இயங்கி வரும் 30 பிள்ளைநேய பாடசாலைகளது மாணவர்களிடையே சுகாதார மேம்பாடு தொடர்பான அறிவை விருத்தி செய்யும் நோக்கிலான வினாடி வினாப் போட்டி அண்மையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

தரம் 10, 11, 12 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த 86 மாணவர்கள் போட்டில் பங்கேற்றனர்.

இப்போட்டியில் முதலாமிடத்தினை செ.நதீரா பர்வின் (அல்-இக்பால் முஸ்லிம் வித்தியாலம்), இரண்டாம் இடத்தினை க. நவீதா (திருஞான சம்பந்தர் வித்தியாலயம்), மூன்றாம் இடத்தினை பா.வாகீசன் (தாண்டிக்குளம் பிறமண்டு வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுள்ளனர் என கல்வி அபிவிருத்தி வள நிலையத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர் சின்னையா தெரிவித்துள்ளார். (அ-2-266)

# மடுமாதாவின் சிலையை காப்பாற்றிய பெருமை விடுதலைப் புலிகளையே சாரும்

மன்னாரிலுள்ள பழைமை வாய்ந்த மடுமாதா சிலையை பலமுறை அழிவில் இருந்து காப்பாற்றியது விடுதலைப் புலிகள்தான் என பிரையன் செனிவிரட்ன தெரிவித்துள்ளார். 1920 ஆம் ஆண்டு வத்திக்கானிலுள்ள போப்பிடன் அனுமதி பெற்று மடுவில் றோமன் கத்தோலிக்கர்கள் புனித மாதா சிலையை நிறுவினர். மிகவும் பழைமை வாய்ந்த இச்சிலையின் அருகில் யேசுவின் திரு உருவமும் உள்ளது. கடந்த 1988 ஆம் ஆண்டு முதல் இலங்கை இராணுவத்தினர் மடுமாதா ஆலயம் மீது தாக்குதலை நடத்தி வந்தனர் என்றும் 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலும் இலங்கை இராணுவம் மன்னாரை முற்றுகையிட்ட போதும் விடுதலைப் புலிகளே மாதா சிலையைக் காப்பாற்றினர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். மன்னார் மாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே பிரையன் செனிவிரட்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## பதவி வெற்றிடங்கள்

திசைக்காட்டியில் பின்வரும் பதவிகளுக்கு தகுதி வாய்ந்தவர்கள் நேர்முகத் தேர்வொன்றின் மூலம் தேர்வு செய்யப்படுவர்.

வேதனம் நேரில் பேசப்படும்.

01.பிரதம நிறைவேற்று அதிகாரியின் அந்தரங்க காரியதரிசி:
(தற்காலிகம்) (யாழ்ப்பாணம்) பெண்கள்,20 வயதுக்கு மேல், சரளமாக ஆங்கிலம், சிங்களம் உரையாடக் கூடியவர்கள். A/L சித்தியடைந்திருத்தல்.

02. வெளிக்கள உத்தியோகத்தர்:
(ஆண்/பெண்) ஒப்பந்த அடிப்படையில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) பட்டதாரிகள், A/L சித்தி.

03.எழுதுவினைஞர்:
(யாழ்ப்பாணம், கொழும்பு) (அமைய அடிப்படை, 20 வயதுக்கு மேற்பட்ட A/L சித்தியடைந்த ஆண்/ பெண் எவரும் விண்ணப்பிக்கலாம்)

04. பாதுகாப்பு உத்தியோகத்தர்:
ஒப்பந்த அடிப்படை (யாழ்ப்பாணம்) 20 வயதுக்கு மேற்பட்ட 8 ஆம் தரச்சித்தியுள்ளவர்கள் பங்குபற்றலாம்.

05. சாரதிகள்
(அமைய அடிப்படை) (யாழ்ப்பாணம்) கார்ச் சாரதிகள் ஆண்கள் 50 வயதிற்கு மேல் தேவை.

நேர்முகத்தேர்வு:
19.05.2012 பி.ப. 5.30 மணிக்கு தலைமைக்காரியாலயத்தில் நடைபெறும் கல்விச் சான்றிதழ், நற்சாட்சிப் பத்திரம், சுயவிபரக் கோவை என்பனவற்றுடன் கோல உடையில் வருதல் எதிர்பார்க்கப்படுகின்றது. தொலைபேசி மூலம் தொடர்புபட்டால், யாராவது சிபார்சு செய்தால் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இந் நேர்முகத் தேர்வு பிறிதொருநாளில் நடாத்தப்படமாட்டாது. E-MAIL மூலமும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

**Ms.A.பிரவீனா**

பிரதம நிறைவேற்று அதிகாரி

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)**



முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

தலைமைக் காரியாலயம்:

இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 221 9016,0756574136

கிளைகள்

| | |
|---|---|
| 115 A, இரத்தினபுரம் வீதி,கிளிநொச்சி, | T.P: 021 228 5544 |
| இல. 22 A, பிராங்பெட் பிளேஸ், பம்பலப்பிட்டி. | T.P: 0112508443 |
| 504,Hampton Street, Melborn, Australia. | T.P: 0061390437100, 0061412479209 |

# அமெரிக்க பிரஜை கொழும்பில் தற்கொலை

(கொழும்பு)

கொழும்பு கொம்பனி வீதி சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தையில் அமைந்துள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் ஐந்தாம் மாடியில் இருந்து கீழே குதித்து அமெரிக்க பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 9.45 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஜோன் எட்வின் கொல்ஸ்டன்ரயன் என்ற 46 வயதுடைய அமெரிக்க பிரஜையே இவ்வாறு உயிரிழந்தவராவார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொம்பனி வீதி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# இணையத்தள தடை தொடர்பான வழக்கை நீதிமன்றம் நிராகரித்தது

(கொழும்பு)

இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமீறல் மனுவை விசாரணை செய்ய அனுமதிக்க முடியாது என நீதிமன்றம் அறிவித்துள்ளது. சுதந்திர ஊடக அமைப்பின் அழைப்பாளர் சுனில் ஜயசேகரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இலங்கை தொடர்பான செய்தி மற்றும் தகவல்களை வெளியிடும் ஐந்து இணைய ஊடகங்களை இலங்கை அரசாங்கம் முடக்கியிருந்தது.

இந்த நடவடிக்கையானது அடிப்படை உரிமை மீறலாகும் என மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க, நிமால் காமினி அமரதுங்க மற்றும் எஸ்.சுரேஸ்ச்ந்திரா ஆகிய நீதவான்களினால் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஊடக அமைச்சர் கெஹலியரம்புக்வெல, அரசாங்கத்தகவல் பணிப்பாளர் ஆரியரட்ன, அதுகல உள்ளிட்ட சிலர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர். மனுதாரர் சார்பில் மனித உரிமை செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான ஜே.சீ. வெலியமுனா ஆஜராகியிருந்தார். இணையத்தளங்களை முடக்கும் நடவடிக்கையானது சட்டவிரோதமானது என அவர் நீதிமன்றில் சுட்டிக்காட்டியிருந்தார். இதேவேளை பதிவு செய்யப்படாத இணையத்தளங்களினால் தனிப்பட்ட நபர்களின் கீர்த்தி நாமத்திற்கு பாதிப்பு ஏற்படுவதாக பிரதிவாதிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அல்சபீல் தெரி வித்துள்ளார். இரு தரப்பு வாதப் பிரதிவாதங்களை பரிசீலனை செய்ய நீதிமன்றம், மனுவை நிராகரிக்கத் தீர்மானித்தது. இணையத்தள முடக்கத்தை அடிப்படை உரிமை மீறலாக கருத முடியாது என நீதிமன்றம் அறிவித்துள்ளது. (அ-2)

# 63 இலங்கையர்களைக்கொண்ட படகு கொகோஸ் தீவை அடைந்தது

புகலிடம் கோரும் 63 இலங்கையர்க ளைக் கொண்ட படகொன்று அவுஸ் திரேலியாவின் பேர்த் நகரிலிருந்து 2 ஆயிரத்து 750 கிலோமீற்றர் தொலை விலுள்ள கொகோஸ் தீவை அடைந்துள்ளது. இவர்கள் அனைவரும் ஆண்கள் எனவும் இவர்களை கிறிஸ்மஸ்தீவுக்கு இடமாற்றுவதற்கான ஏற்பாடுகளுக்காக இவர்கள் உள்ளூர் கழகமொன்றில் தங்க வைத்துள்ளதாகவும் அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்படகு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கொகோஸ் தீவிலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் வைத்து இடைமறிக்கப்பட்டதாக அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் ஜேஸன் கிளேர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மெஹாவாசியில் வெற்றியீட்டியோருக்கு பரிசளிப்பு

இலங்கை வங்கியினால் கடந்த வருட இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட Save & Win எனும் சிறப்பு வைப்புத் திட்டத்திலும் இந்த வருடம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட Mega Vasi வைப்புத்திட்டத்திலும் வடமாகாணத்தில் வெற்றியீட்டிய 289 அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே மடிக்கணனிகள், காகில்ஸ் பண வவுச்சர்கள், ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான வீட்டு உபகரண பரிசுக்கூப்பன்கள் மற்றும் ரூபா 10ஆயிரம் பணப்பரிசில்கள் என்பவை இன்று வெள்ளிக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் கௌரவிப்பு நிகழ்வின் போது வழங்கப்படவுள்ளது என வடபிராந்திய பதில் செயற்பாட்டு முகாமையாளர் அறிவித்துள்ளார். (அ-7)

# பஞ்சாபிடம் 6 விக்கெட்டுக்களால் பரிதாபமாக தோற்றது சென்னை

ஐ.பி.எல் போட்டித் தொடரின் 66 வது லீக் ஆட்டம் நேற்று தர்மசாலா மைதானத்தில் நடைபெற்றது. இதில் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும், கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில்வென்றகிங்ஸ்லெவன் அணியின் தலைவர் கில்கிறிஸ்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி சென்னை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக முரளிவிஜய்யும் மைக்ஹசியும் களமிறங்கினர்.

முரளி விஜய் 7 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பிரவீன் குமார் பந்தில் கில்கிறிஸ்ட் வசம் பிடி கொடுத்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து ஹஸி 10 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து ரெய்னா- தோனி களமிறங்கினர். ரெய்னா 17 ஓட்டங்கள் எடுத்திருந்த போது அசார் மொகமட் பந்தில் கில்கிறிஸ்ட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். டோனி தன் பங்கிற்கு 6 ஓட்டங்கள் எடுத்து சைனியிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

பின்னர் ஜடேஜாவுடன் பிராவோ ஜோடி சேர்ந்தார். ஜடேஜா நிதானமாக விளையாடினாலும் பிராவோ சற்று அதிரடியாக விளையாடி அணியின் ஓட்டஎண்ணிக்கையை சற்று உயர்த்தினார்.

ஜடேஜா 13 ஓட்டங்கள் எடுத்து வெளியேற மோர்க்கல் களமிறங்கினார். மோர்கல் 14 ஓட்டங்களிலும் பிராவோ 48 ஓட்டங்களிலும் வெளியேற சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 120 ஓட்டங்கள் எடுத்தது.

பஞ்சாப் அணி சார்பில் பிரவீன் குமார், மொகமட், அவ்னா தலா 2 விக்கெட்டுக்களையும், ஹாரிஸ் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பின்னர் 121 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணியின் தலைவர் கில்கிறிஸ்ட்டும், மன்தீப் சிங்கும் களமிறங்கினர்.



நிதானமாக விளையாடிய இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 51 ஓட்டங்கள் சேர்த்தது. 24 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மன்தீப் சிங் மோர்க்கல் பந்தில் வெளியேற அதனைத் தொடர்ந்து களமிறங்கிய சைனி ஒரு ஓட்டத்திலேயே வெளியேறினார்.

பின்னர் கில்கிறிஸ்டுடன் ஹஸி ஜோடி சேர்ந்தார். ஹஸி நிதானமாக விளையாடினாலும் கில்கிறிஸ்ட் சென்னை அணியை திக்குமுக்காட செய்தார். ஹஸ்ஸி 9 ஓட்டங்களிலும், சிட்னிஸ் 11 ஓட்டங்களிலும் வெளியேறினார்.

நிதானமாக விளையாடிய பஞ்சாப் அணி 16.3 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 123 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் பஞ்சாப் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கில்கிறிஸ்ட் 64 ஓட்டங்களுடனும், மொகமட் 9 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

சென்னை அணியின் தோல்வியால் அந்த அணியின் ரசிகர்களுக்கு மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக கில்கிறிஸ்ட் தெரிவானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**
இரவு 8 மணிக்கு ஹைதராபாத்தில் நடைபெறும் போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி மோதுகின்றது.

## பொன்சேகா நாளை...

இதற்கு அனைத்து அமைச்சர்களும் தமது இணக்கத்தை வெளிப்படுத்தியதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றியின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நாளை சனிக்கிழமை சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படலாம் என தாம் எதிர்பார்ப்பதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் நேற்று தகவல் வெளியிட்டிருந்தார்.

சரத் பொன்சேகாவை சிறையில் தடுத்து வைத்திருப்பதால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எமது அரசு பல்வேறு அழுத்தங்களை எதிர்நோக்கி வருகின்றது. அதனால் சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு விளக்கி கூறியுள்ளனர்.

இதனையடுத்து யுத்த வெற்றியின் 3 ஆண்டு நிறைவில் சரத் பொன்சேகாவின் விடுதலை குறித்த செய்தியை ஜனாதிபதி அறிவிப்பார் என தாம் எதிர்பார்ப்பதாக ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப் பினர். டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸை நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்தித்து சரத் பொன்சேகாவின் விடுதலை விரைவில் நடக்கும் என்று தெரிவித்தமையும்,

இதனையடுத்து வைத்தியசாலைக்குச் சென்று சரத் பொன்சேகாவை டிரான் அலஸ் சந்தித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-8)

# காதலியின் சவாலை நிறைவேற்றினேன் மனோஜ் திவாரி

உலகின் மிகச்சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவரான லசித் மலிங்கவின் பந்து வீச்சில் நேற்றுப் பெற்றுக் கொண்ட சிக்ஸ் தனது காதலியின் சவாலை நிறைவேற்றிக் கொள்ளப் பெறப்பட்டது என கொல்கத்தா நைட் ரைட்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர் மனோஜ் திவாரி தெரிவித்துள்ளார்.

லசித் மலிங்கவிற்கு எதிராக நேற்று முன்தினம் போட்டியில் மிகுந்த மனத்திடத்துடன் காணப்பட்டதாகவும், அவரின் பந்தில் சிக்ஸ் ஒன்றை அடிப்பது பற்றி தெளிவாக இருந்ததாகவும் தெரிவித்த மனோஜ் திவாரி, அது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

தனது காதலி ஒரு முறை தன்னிடம் லசித் மலிங்கவின் பந்துவீச்சில் தன்னால் சிக்ஸர் ஒன்றைப் பெற்றுக் கொள்ளவே முடியாது எனத் தெரிவித்திருந்ததாகத் தெரிவித்த அவர், தனது காதலியின் சவாலை தான் ஏற்றுக் கொண்டதாகத் தெரிவித்தார்.

## பொன்சேகா விடுதலை...

போதிலும், அது வெற்றியளிக்கவில்லை. இதேவேளை, பொன்சேகாவின் விடுதலைக்கு ஜனாதிபதி எவ்வித நிபந்தனையும் விதிக்கவில்லை என அனோமா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பை அடுத்து டிரான் அலஸ் நேற்று முன்தினம் நவலோகா மருத்துவ மனைக்குச் சென்று சரத் பொன்சேகாவை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

# வான்கடே மைதானத்தில் நுழைய ஷாருக்கானுக்கு வாழ்நாள் தடை



நான் ஒன்றும் குடிபோதையில் வான்கடே மைதான பாதுகாவலர்களுடன் தகராறு செய்யவில்லை என்று பாலிவுட் நடிகர் ஷாருக் கான் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் ஐந்தாவது தொடரில் மும்பை இண்டியன்ஸ் அணியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின. இதில் கொல்கத்தா அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

போட்டி முடிந்த பிறகு கொல்கத்தா அணி உரிமையாளர் ஷாருக்கான் அரங்க பாதுகாவலர்களுடன் குடிபோதையில் தகராறு செய்தார் என்று கூறப்பட்டது. மேலும் அவருக்கு வான்கடே அரங்கில் நுழைய வாழ்நாள் தடைவிதித்து மும்பை கிரிக்கெட் சங்கம் நேற்று உத்தரவிட்டது.

இந்நிலையில் இதுகுறித்து ஷாருக் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

நான் போட்டியைப் பார்க்கவே செல்லவில்லை. போட்டியைக் காணச் சென்ற எனது குழந்தைகளை வீட்டுக்கு அழைத்துச்செல்லவே வான்கடே அரங்கிற்கு சென்றேன்.

அப்போது அங்கிருந்த வீரர்களை பாராட்டினேன். அப்போது அங்கு மும்பை கிரிக்கெட் சங்கம் அதிகாரிகள் பாதுகாப்பு என்ற பெயரில் எனது குழந்தைகளைப் பிடித்து தள்ளினர்.

அதைப்பார்த்தவுடன் எனக்கு கோபம் வந்துவிட்டது. பாதுகாவலர்கள் தான் என்னிடம் மோசமாக நடந்தனர். நான் ஒன்றும் குடித்துவிட்டு ரகளை செய்யவில்லை.

குழந்தைகளைப் பிடித்து தள்ளினால் எந்த பெற்றோருக்குத் தான் கோபம் வராது. இப்படித்தான் அவர்கள் நடந்து கொள்வார்கள் என்றால் அந்த அரங்கிற்கே நான் செல்ல மாட்டேன். இந்த சம்பவத்திற்காக மும்பை கிரிக்கெட் சங்கம் தான் என்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றார்.

# இலங்கைத் தொடர் சவால்தான் -டேவ் வட்மோர்

இலங்கைக்கு எதிராக இலங்கையில் இடம்பெறவுள்ள தொடர்மிகுந்த சவாலான தொடராக அமையும் என பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார்.

லாகூரில் வைத்து பாகிஸ்தான் வீரர்களுக்கான பயிற்சிமுகாமிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

லாகூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் இலங்கைத் தொடருக்குத் தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கு பயிற்சிகளையும் தயார்படுத்தல்களையும் மேற்கொண்டுவரும் வட்மோர், லாகூரில் உள்ள வெப்பநிலையும், இலங்கையின் வெப்பநிலையும் ஒன்றாக காணப்படும் என எதிர்பார்ப்பதால் பாகிஸ்தான் வீரர்கள் இலங்கை வானிலைக்கு பழக்கப்பட்டுக் கொள்வார்கள் எனவும் தெரிவித்தார்.

துடுப்பாட்ட வீரர்களும் பந்துவீச்சாளர்களும் கடும் வெப்பத்திற்கு மத்தியில் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இலங்கை காலநிலைக்கு தாங்கள் முழுமையாக தயாராகியிருப்பதை வீரர்கள் உறுதி செய்துகொள்ள விரும்புகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

## தமிழரைக் கொன்று...

ஹிட்லர் அரசால் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட பிறகு, உலகில் நடத்தப்பட்ட மிக பெரிய இனப் படுகொலை ஈழத் தமிழர் படுகொலை தான்.

இலங்கையில் இனப் படுகொலை நடத்தப்பட்டதை ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூன் அமைத்த வல்லுநர் குழு உறுதி செய்துள்ள நிலையில், அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய இந்தியா உள்ளிட்ட வல்லரசு நாடுகள், கொலைகாரர்களை மயிலிறகால் வருடி விடுவது வேதனை அளிக்கிறது.

இனப்படுகொலை குறித்து விசாரணை நடத்துவதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்ட போதிலும், அதன் மீது இன்று வரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

மிகக் கொடூரமான முறையில் அரகேற்றப்பட்ட ஈழத்தமிழர் படுகொலைக்கு நீதி பெற்றுத்தர வேண்டிய பெரும் பொறுப்பு அவர்களின் சொந்தங்களான தமிழக தமிழர்களுக்கு உண்டு.

இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒருங் கிணைத்து தனித் தமிழீழம் அமைப்பது குறித்து உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர்களிடையே ஐ.நா. மூலம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

அதற்கு முன்பாக 1999 ஆம் ஆண்டில் கொசோவா நாட்டில் செய்யப்தட்டதை போன்று இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகள் உடனடியாக ஐ.நாவின் நேரடி நிர்வாக வரம்புக்குள் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து சிங்களவர்களும், சிங்களப் படைகளும் வெளியேற்றப்பட வேண்டும். இந்த இலக்கை நோக்கி போராட தமிழ் நாட்டு தலைவர்கள் அனைவரும் இனப்படு கொலை நாளான இன்று உறுதி ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (ந-8,11)

## வடக்கு -கிழக்...

கருத்தினையும் நானும் கொண்டிருக்கிறேன்.

இந்தியாவின் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுயாட்சி அதிகாரங்களை ஒத்ததான அரசியல் தீர்வுக்கு அனைத்துலக மட்டத்தில் பெருமளவு ஆதரவு நிலவுகின்றது. மீண்டுமொரு ஆயுதப் போர் தொடங்குமானால் அனைத்துலக ஆதரவு துளியளவிற்கும் அற்றுப் போய்விடும்.

தமிழ் மக்கள் பாரிய அழிவுக்கு முகம் கொடுத்துள்ளனர். அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் தற்போதைய ஆட்சியாளர்களே தமிழ் மக்களை நோக்கி நேசக்கரம் நீட்டவேண்டுமென்ற பரவலான கருத்து அனைத்துலக மட்டத்தில் நிலவுகின்றது.

போரின் இறுதிக்கட்ட அவலங்களுக்குரிய பொறுப்பு கொழும்பிடம் உள்ளது. இரு தரப்பும் அந்த அவலங்களைத் தவிர்ப்பதற்கு முனையவில்லை.

2000 ஆம் ஆண்டில் ஆணையிரவு படைத்தள வெற்றியை அடுத்து படை பலத்தில் விடுதலைப் புலிகள் உச்சநிலையில் இருந்த போது சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்டது. இப்புறநிலையில் சமாதானப் பேச்சுக்களைச் சாதகமாகக் கையாண்டிருப்பின் கூட்டாச்சித் தீர்வினை எட்டியிருக்க முடியும்.

கூட்டாச்சித் தீர்வு பற்றி ஆராய்வதைத் தட்டிக் கழித்தமை, அனைத்துலக சமூகத்திடமிருந்து தம்மைத் தனிமைப்படுத்தியமை, இராணுவத்தீர்வில் நம்பிக்கை கொண்டிருந்தமை ஆகியன விடுதலைப் புலிகளின் தலைவர் இழைத்த தவறுகள் என விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது எரிக் சொல்ஹெய்ம் விமர்சனங்களை முன்வைத்தார்.

அதேவேளை அனைத்துலக சமூகமும் விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தியது. அனைத்துலக சமூகம் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியிருக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், தமிழர்களின் அரசியலுக்குரிய தலைமை இலங்கையைத் தளமாகக் கொண்டிருக்கவேண்டும். புலம்பெயர் தமிழர்கள் அதற்கு உறுதுணையாக இருக்க முடியுமே தவிர தலைமை தாங்க முடியாது என்றார். (ந-8,11)

## பலாலி ஆசிரிய கலாசாலை ஆராய அதிகாரிகள் வருகை

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தொடர்பில் ஆராய கல்வி அமைச்சின் அதிகா ரிகள் சிலர் இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர். யாழ்ப்பாணம் வரும் இவர்கள் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவையும் சந்தித்து பேசவுள்ளனர். (ந)


**New Science Center**
(வெலிங்டன் சந்தி அருகாமை)

2012ம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு

**PHYSICAL - CHEMISTRY PAPER CLASS**

கடந்த 30 வருடகால பல்தேர்வு வினாக்கள், கட்டுரை வினாக்களுக்கான மீட்டலுடன் கூடிய விளக்கம் அளிக்கப்படும்.

ஆசிரியர் – T. சுசாந்தன் (B.Sc.)

ஆரம்பம் : 19.05.2012 (சனி – 12.30)

(8471)


# பலாலியில் நடந்த அஞ்சலி நிகழ்வில் இந்தியத் துணைத் தூதர் அவமதிப்பு

## மன்னிப்புக் கோரினார் யாழ்.கட்டளைத் தளபதி

(யாழ்ப்பாணம்)

போரில் உயிரிழந்த முப்படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்விற்கு வருகை தந்த யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வி. மகாலிங்கத்திற்கு ஆசனம் ஒதுக்கப்படாமைக்கு யாழ் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மன்னிப்பு கோரினார்.

வடக்குமாகாண சபையின் ஏற்பாட்டில் போரில் உயிரிழந்த முப்படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று பலாலி இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு வருகைதந்த விருந்தினர்களை இராணுவத்தினர் வரவேற்று அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர வைத்தனர். இந்நிலையில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் அவர்களும் நிகழ்விற்கு வருகை தந்தார்.

இருப்பினும் இந்தியத் துணைத் தூதுவரை எந்தவொரு இராணுவ வீரர்களும் முன்சென்று வரவேற்கவில்லை.

இருந்தபோதிலும் விருந்தினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் தூதுவர் சென்று அமர்ந்து கொண்டார்.

அந்த ஆசனம் வேறு ஒருவருக்கு ஒதுக்கப்பட்டிருந்ததனாலும் பிரதம விருந்தினராக வருகைதந்த வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை வரவேற்பதற்கு ஏனைய விருந்தினர்கள் தமது இருக்கையிலிருந்து எழுந்து வந்ததால் துணைத் தூதுவரும் தான் இருந்த ஆசனத்திலிருந்து எழுந்து வந்து ஏனைய விருந்தினர்களுடன் ஆளுநரை வரவேற்க நின்றார்.

இந்த சந்தர்ப்பத்தில்இந்தியத்துணைத் தூதுவருக்கு ஆசனம் ஒதுக்கப்படவில்லை என யாழ். கட்டளைத் தளபதிக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனால் மன உளைச்சல் அடைந்த கட்டளைத் தளபதி துணைத் தூதுவரிடம் சென்று பேச முற்பட்டார்.

இருப்பினும் தமக்கு ஏற்பட்ட அவமதிப்பை கட்டளைத் தளபதியிடம் எடுத்துக் கூறியபோது இந்திய துணைத் தூதருக்கும் கட்டளைத் தளபதிக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

இதன்போது, இந்த நிகழ்வு யாழ். கட்டளைத் தளபதியால் ஏற்பாடு செய்யப்படவில்லை. வடக்கு மாகாண சபையே இதனை ஏற்பாடு செய்திருந்தது. இருப்பினும் ஆசனம் ஒதுக்கப்படாதது தவறுதான் இதற்காக தாம் மன்னிப்பு கோருவதாக தெரிவித்தார்.

இதன்போது யாழ். மாநகரசபை முதல்வரினால் தனக்கும் ஆசனம் ஒதுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தென்னிலங்கையைச் சேர்ந்த தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரியும் ஒருவர் இந்நிகழ்வில் அறிவிப்பாளராக செயற்பட்டிருந்தார்.



இவரினால் விருந்தினர்களின் பெயர்கள் பல முறை அறிவிக்கப்பட்டபோதும், யாழ்.மாநகரசபை முதல்வர் மற்றும் இந்தியத் துணைத் தூதுவரின் பெயர்கள் விடுபட்டுக்கொண்டே சென்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-6)


Save and Win!... BOC இலங்கை வங்கியிடமிருந்து

சேமிப்புக்கான ஊக்குவிப்பும்... அனுகூலங்கள் பலவும்...

MEGA வாசி 1ம் காலாண்டு

சீட்டிழுப்பு முடிவுகள்

பரிசுச் சீட்டிழுப்பு முடிவுகள்

வடமாகாணத்தில் 289 அதிஷ்டசாலிகள்!

43 இலட்சம் பெறுமதியான பரிசுகள்...

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று பிப 2.30 மனிக்கு வழங்கப்படவுள்ளது.

வெற்றியாளர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்......

பரிசுகளாக...
3 பெறுமதியான கார்கள்
225 ...
100 ...
4500 ...
5000 ...

அடுத்த மாபெரும் சீட்டிழுப்புக்களுக்கு இன்றே சேமியுங்கள்!

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

உதவிப்பொது முகாமையாளர் இலங்கை வங்கி, வட மாகாணம்



**மாதம் 50,000 ரூபா வருமானத்துடனான வெளிநாட்டுக் கல்வி!**



UK, Australia & Malaysian Certified
**Hospitality Management**

மலேசிய அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழான பயிற்சிநெறி

முதல் 3 மாதம் English & Skillls Training

அடுத்த 9 மாதங்கள் 50,000 ரூபா வருமானத்துடன் கூடிய தொழிற்பயிற்சி

உணவு, தங்குமிட வசதி இலவசம்!

SkillsMalaysia City & Guilds UEL University of East London aets

பயிற்சிநெறி முடிவில்
University of East London, Skills Malaysia Invite, City & Guilds (UK), AETS (Australia) சான்றிதழ்களுடன்.

மலேசியா அல்லது சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு!
(UK, Australia, Canada, Swiss க்கும் செல்லலாம்)

- 9ம் வகுப்பு வரையில் படித்த, 18-45 வயதுக்கு இடைப்பட்ட எவரும் இணைந்துகொள்ளலாம்.
- விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து ஒரு மாதத்தில் பயண உத்தரவாதம்!
- விசா ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நேரடியாக மலேசியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சி நிறுவனத்தில் இணைக்கப்படுவர்.
- பயிற்சிநெறிக் காலத்தில் நேரடிக் கண்காணிப்பு மற்றும் உதவிகள்.

முதல் அணியில் 30 பேருக்கு மட்டுமே வாய்ப்பு
ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்!

நேரடி விளக்கக் கருத்தரங்கு மற்றும் Spot Admission!

19-05-2012 சனி காலை 10 மணி – யாழ் ஞானம்ஸ் ஹொட்டேல்
25-05-2012 வெள்ளி காலை 10 மணி – கிளிநொச்சி பிரதேசசபை மண்டபம்

மே 25, 26, 27, 28 இல் | கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, மலையகம் ஆகிய பிரதேசங்களில் நேரடி கருத்தரங்கு மற்றும் அனுமதி.

MEDIA

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 8060 நேரடி: 0773 616 798


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் **திருமதி மலர்விழி குணபாலன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**சிவலிங்கம் நடராசா** (ஓய்வுபெற்ற தபால் அதிபர்)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு பெருங் கவலையடைகிறோம். அன்னாரின் இழப்பால் துயரடைந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆசிரியர் கழகம்
யா/ சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை

(C-025)


*Thanking for MCS and Staffs*

Our Lecturers are really a excellent to deal with the subjects in clear & simple. Our fantastic exam results speak for themselves led by our top class professional team and first class lecturing. We are really enjoyed during my class time because of our lecturers they are very keen with us. They focused on every individual students & stimulating the students to solve the problem in our own style. We thank MCS & Lecturers to covered full syllabus on time.

- Managerial & Operational Level student

CIMA @ MCS

Qualified Lecture Panel- CIMA- UK



Special offer 25%

Certified Level - 19.5.2012
Operational Level- 27.5.2012

Successful Pass History!

Syllabuses are covered on Time

Type <name>_<level> & Sms to 772 395 895

MCS IT CAMPUS

324, Palay Road, Jaffna.
For details Call us 772 395 895


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.